உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

...ர் 40 )( துன்மதி ஆண்டு ஆனித்திங்கள் 10—7—81 )( இதழ் ...

திருவாரூர் அருள்மிகு நீலோத்பலாம்பாள்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[★]—

உன்னைவிட நீங்குமுயிர்
ஒன்றில்லை ஆதலினால்
என்னைவிட நீங்குவதும்
இல்லைநீ — பொன்னைவிடப்
பூந்தேன் அலருடையாய்
பொங்குமது ராபுரியில்
வேந்தே பிரியா விடை.

— சொக்கநாத வெண்பா. 78

ஆசிரியர் :-
வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
**சி அருணைவடிவேல் முதலியார்**

உ
குருபாதம்

# “ ஞானசம்பந்தம் ”

**தருமையாதீனத் திங்கள் இதழ்**

**மலர் 40 | 10-7-81 | இதழ் 8**

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | ஒன்றுபடுவோம் உரியபங்கேற்போம் | 337 |
| 2 | தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை... | 342 |
| 3 | வாசகர்கள் சிந்தனைக்காக ... | 346 |
| 4 | அட்டைப்படம் ... | 350 |
| 5 | செய்திகள் ... | 351 |
| 6 | திருவாரூர் தலச்சிறப்புக்கள் ... | 353 |
| 7 | அபிராமி அந்தாதி ... | 372 |
| 8 | பார்வையாளர் குறிப்பு நகல் ... | 378 |
| 9 | எதிர்காலப் ... | 379 |

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 18
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 40 | துன்மதி - ஆனி - 10—7—81 | இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலி!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## ஒன்றுபடுவோம் - உரியபங்கேற்போம்

### இன்றுள்ள அவலநிலை :

நமது பாரம்பரியம்மிக்க இந்து தர்மங்களும், இவற்றைக் கட்டிக்காத்துவரும் வேதவழிப்பட்ட சைவ - வைணவ சமயங்களும், இச்சமய நிலையங்களாகிய திருக்கோயில்களும் - திருமடங்களும் இன்று பல்வேறுகாரணங்களால் உரியவளர்ச்சியினைப் பெறமாட்டாது தேங்கி நிற்கின்றன. சமயச்சார்பற்ற அரசு என்ற ஆட்சியாளர்களின் - பின்விளைவுகளை அறியாத கோஷங்களும், பெரும் அந்நியநாட்டுப் பணபலத்தோடு திட்டமிட்டு நடத்தப்படும் மதமாற்றங்களும், இந்து சமய அறநிலையங்களைப் பாதுகாப்பதற்கு என்றே அறநெஞ்சு

படைத்த முன்னேர்களால் வழங்கப்பெற்ற பெருஞ்சொத்துக்களின் வருவாய், இந்நிலையங்களுக்குக் கிடைக்க இயலாத சமூக-அரசு-இலாகா அமைப்புக்களும், பக்திமிக்கவர்கள்கூட இவற்றைப் பேணிக்காப்பதில் நமக்கும் பங்கு உண்டு என்று கருதாது பராமுகமாக இருந்துவரும் பாங்குகளும் இந்த அவல நிலை இன்று உருவாகியிருப்பதற்குக் காரணங்களாகின்றன. பரஸ்பரக் குற்றச்சாட்டுகளாலும், தானே எல்லாம் சரியாகி விடும் என்று கருதும் நம்மவர்களின் மெத்தனப்போக்காலும் நிலைமை மேலும் கடினமாகிவருவதை நம்மில் பலரும் உணராதிருப்பது பேரவலமாகத் தோன்றுகின்றது.

### சமயநிலையங்களின் பங்கு :

சமய வளர்ச்சிப் பணிகள் என்பது பெரும்பாலும் கோயில்களோடுமட்டுமே தொடர்புகொண்டிருந்தது. இன்றைக்குப் பிறசமயத்தவர்களின் பல்வேறு நடவடிக்கைகளினல் சமயத்தின் பணி அளவுகள் பன்முகப்பட்டுச் சமூக அளவில் விரிவாக இயற்றவேண்டியனவாக உள்ளன. திருக்கோயில் வழிபாடு - சமயநூல் வெளியீடு, தத்துவவிளக்கப் பிரசாரம் என்பவை மட்டுமே இன்று சமயவளர்ச்சிப் பணிகள் என்றில்லாமல், பன்முகப்பட்டு நாம் மேற்கொள்ளவேண்டிய பணிகள் புன்னூருக உருவெடுத்துள்ளன. கல்வி நிலையங்களை - சமயஞ்சார்ந்த வண்ணத்தோடுநிறுவித்திறம்பட நடத்துதல்-மருத்துவ மனைகள் பல நிறுவி மக்களின் உடற்பிணிக்கு மருத்துவ உதவி வழங்குதல் - திக்கற்றவர்களையும், வறுமையில் வாடுபவர்களையும் அரவணைத்து உணவுதந்து வாழ்வித்தல், எதிர்பாராத இழப்புக்கள் நேரும்போதெல்லாம் உதவிக் கரம்நீட்டி ஆவனசெய்தல் போன்ற பல்வேறு பணிகளை இன்று சமய நிலையங்களும், சமயஞ்சார்ந்த நிறுவனங்களும் இயற்றவேண்டியநிலை உருவாகியிருப்பதைச் சமயவளர்ச்சியில் நாட்டங்கொண்ட அனைவரும் நன்கு உணர்ந்திருப்பர் என்றே கருதுகின்றோம்.

### சக்கரம் இல்லாத தேர்கள் :

இந்நாட்டில் முந்நூறு ஆண்டுகளுக்குச் சற்று முன்பின் ஞகவந்த மதங்கள் இயற்றிவரும் கல்வி, மருத்துவம் மற்றும் சமூகப்பணிகளை வியக்கும் இந்து மதத்தைச் சார்ந்த பலரும், நமது சமயமும் இத்தகு பணிகளை இயற்றவேண்டும் என்று விரும்புவது இயற்கை. இவர்களின் விருப்பம் நியாயமானது என்பதுமட்டுமல்ல; இக்காலச் சூழ்நிலையில் பெரிதும் இன்றி

யமையாததும் ஆகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இத்தகு பன்முகப்பட்ட பெரிய பணிகளை யார் இயற்றுவது? இதற்குத் தேவையான நிதிவசதிகளுக்கு வழி என்ன? என்பதுபற்றிப் பலரும் சிந்திக்காதிருப்பது வேதனைக்குரியது. நம்மவர்களில் பலர், நமது நாட்டிலிருக்கும் ஆயிரக்கணக்கான திருக்கோயில் - திருமடங்களின் வருவாய்களிலிருந்தும், ஏன் இவற்றையெல்லாம் செய்யக்கூடாது எனவினவி வருகின்றனர். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இவர்களது வினா நியாயம்போலவே தோன்றும். ஊடுருவி உள்புகுந்து நோக்கினால் யாதொன்றையும் இன்றையநிலையைவிட விரிவாகஇயற்றும் அடிப்படையோ, பண ஆற்றலோ இவைகளுக்கு இல்லை என்பது நன்கு விளங்கும். சக்கரம் இருந்தும் ஓடாத தேர்போல், நிலமிருந்தும் வருவாய் வராத முதலீட்டைப் பெற்றிருக்கின்றன பெரும்பாலான அறநிலையங்கள்.

## அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை :

தமிழ்நாட்டில் இருக்கும் ஆயிரக்கணக்கான திருக்கோயில்களுக்கு நிலவருவாயே அடிப்படை. இவற்றின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சாகுபடியாளர்களிடத்திலேயே குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து உரிய வருவாய், கோயில்களுக்குக் கிடைக்குமானால், கோயில் நிர்வாகச் செலவுகள்போக எஞ்சிய தொகையில் சில சமூகத் தேவைகளை இவை நிறைவுசெய்ய இயலும். ஆனால் அரசின் சட்ட திட்டங்களும், மாற்றாந்தாய் மனப்பான்மைச் செயல்களும், வேறு சில தடைகளும் எல்லாம் இருந்தும் ஒன்றுமில்லாத நிலையை இக்கோயில்களுக்கு ஏற்படுத்தியுள்ளன. நித்திய வழிபாடுகளுக்கே வசதியின்றி, இங்கே பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதியங்களும் பல திங்கள்களுக்கு வழங்கப்படாது இவை இன்று செயலிழந்து பொலிவுகுன்றி வருகின்றன.

அரசு பிறமதங்களைச் சிறுபான்மையர் உரிமையில் தலையிடலாகாது என நன்கு வளரவிட்டுவிட்டு, இந்துமதத்தைத் தனித்தியங்கவிடாமல் அறநிலைய ஆட்சித்துறை என்ற இலாகாக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு இதன் வளர்ச்சிக்கு எதுவும் செய்யாமல் இருந்துவருகிறது. இந்துமத வளர்ச்சிக்கு உரிமையோடு செயல்படஇயலாத அரசு இக்கோயில்களின் கொஞ்சநஞ்சமுள்ள உபரிநிதியையும் மனம்போன போக்கில் மடைமாற்றிக்கொள்கின்றது. இவற்றையெல்லாம் தட்டிக் கேட்பார் இல்லாதிருப்பது நம் சமயத்தவரின் பெருங்குறை

யாகும். கேட்பவர்கள் ஒருசிலரிருந்தால் அவர்களை அச்சுறுத்துவது அல்லது வசப்படுத்திக்கொள்வது என்பதை ஒரு அரசியல் தந்திரமாகக் கையாண்டுவருகிறது. அரசின் இந்நிலை திருந்தினல் அறநிலையங்களின் நிதிநிலை சீர்பெறும். ஓரளவு சமுதாயப் பணிகளை அறநிலையங்கள் ஏற்று நடத்தக்கூடும்.

## நீங்கள் என்னசெய்யப்போகிறீர்கள் !

இந்நிலையில், பெரும் நிதிநிலைகளை உருவாக்கி, பிறநாட்டிலிருந்து வந்து புகுந்த சமயங்களோடு போட்டிபோட்டுக்கொண்டு சமூகப்பணியாற்றும் வலிமை இந்நாட்டுச் சமயநிலையங்களுக்கு இன்று இல்லை. கொஞ்சநஞ்சம் இருக்குமானல் அரசின் சட்டதிட்டங்களும் கெடுபிடிகளும் யாதொன்றையும் நிறைவாகச் செய்ய அனுமதிக்கமாட்டா. எனவே, ஏதேனும் நமது சமய வளர்ச்சி நோக்கில் சமூகப்பணியாற்றவேண்டும் என்ருல், மக்கள்தாம் தங்கள் வருவாயிலிருந்து ஒரு சிறு பகுதியை ஒதுக்கி இவ்வாருனசெயல்களைச் செய்தாகவேண்டும். கடல்கடந்த நாடுகளில் வாழும் நமது சமயத்தவர்கள் அங்கெல்லாம் நமது சமயவளர்ச்சிக்காக எவ்வாறெல்லாம் பல்வகையில் உதவுகின்ருர்கள் என்பதை நாம் நன்கு ஆராயவேண்டும். நமது தாய்ச்சமயம், சமயவழிப்பட்ட நாகரிகம், பண்பாடுஇவை சிதையாதிருக்கவேண்டுமென்பதற்காக ஒவ்வொரு இந்துவும் தத்தம் வருவாயிலிருந்து ஒருசிறுபகுதியையாவது சமயவளர்ச்சிக்கென ஒதுக்கியே தீரவேண்டும் இப்போதுள்ள சூழ்நிலையில் எந்த ஒரு சமய நிறுவனமும் – தனித்து நின்று, யாதொரு பெரிய சமூகநலப்பணியினையும் இயற்றக்கூடிய அளவில் விரிவான பொருளாதாரப் பின்னணியைக்கொண்டிருக்கவில்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து நாம் செயல்பட்டாக வேண்டும்.

## சிறுதுளி பெருவெள்ளம் :

சிறுபான்மைச் சமயத்தைச் சார்ந்தவர்கள் இன்றும், தமிழ் நாட்டில் தங்கள் சமயவளர்ச்சிக்கென, இயன்றவாறு திங்கள் தோறும் ஒரு தொகையைச் சமயநிலையங்களிடம் சேர்ப்பித்து வருகின்றனர். தமிழ்நாட்டில் இன்று ஏறத்தாழ நாலுகோடி இந்துக்கள் வாழ்கிருர்கள். இவர்களில் திங்கள் ஒன்றுக்கு ஒரு ருபாய் வழங்கும் வலிமை ஒரு கோடி பேருக்காவது கட்டாயம் இருக்கும். இவர்கள் தலா ஒரு ருபாய் வீதம் ஒரு மாதத்திற்கு ஒருகோடி ருபாய் வழங்கினல் அளப்பரிய சமூகப் பணிகளை, நமது சமயத்தின் பெயரால் நிறைவாக இயற்ற இயலும். சிறுசிறு அமைப்புக்கள்வழியே இவற்றை வசூலித்து

ஒருபொறுப்புள்ள தலைமையின்கீழ் செயற்படுத்தினல் பல அரிய பணிகளை நம்மால் செய்ய இயலும். எனவே, மற்றவர்கள் ஏன் செய்யவில்லை எனக்கேட்பதை நிறுத்திவிட்டு, இனி நாம் நமது சமயவளர்ச்சிக்காக என்ன செய்யப்போகிருேம் எனச் சிந்திப்பதே பயனுள்ளதாகும்.

## சமய – சமூகப்பணிபுரியும் நிறுவனங்கள் :

அமெரிக்காபோன்ற நாடுகளில் கிருத்துவ சமய வளர்ச்சி நோக்கில் இயற்றப்பட்டுவரும் பல்வேறு பணிகள்குறித்து ஒரு அன்பர் எழுதிய கடிதம் ஒன்றும் இவ்விதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நமது தருமையாதீனமும், இதுவரை இயற்றிவந்திருக்கும் சமயஞ்சார்ந்த சமூகப்பணிகளோடு, எதிர்காலத்தில் திட்டமிட்டு இவற்றை இயற்ற 'ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம்' என்ற அமைப்பினை உருவாக்கி, இயன்ற அளவு சமூகப்பணிகளை இயற்றிவருகிறது. நாடெங்கிலும் இவற்றின் கிளைகள் உருவாக்கப்பட்டுவருகின்றன. இவற்றின் வாயிலாகக் கல்வி, மருத்துவம் மற்றும் துயர் துடைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. நிதிநிலை சீர்பெற்ற இம்மன்றம் முழு அளவிற் செயற்பட மேலும் சில ஆண்டுகள் ஆதல்கூடும். மேலும், விஸ்வஹிந்து பரிஷத், இந்துமுன்னணி, இந்துசமய மன்றம், தமிழ்நாடு தெய்விகப்பேரவை, அருள்நெறித் திருக்கூட்டம்போன்ற பேரமைப்புக்களும் சமய சமுதாய ஆக்கப் பணிகளில் பங்குகொண்டு தனித்தும் இணைந்தும் பணியாற்றி வருகின்றன. இவற்றுள் ஏதேனும் ஒருஅமைப்பில் அவரவர் விருப்பத்திற்கேற்பத் தன்னை இணைத்துக்கொண்டு பொருளாலும் உழைப்பாலும் அமைப்புக்களை வலுப்படுத்தி, பிற சமய அமைப்புக்களில் வெறுப்புக்கொள்ளாது நம்மை எதிர்நோக்கியுள்ள சவால்களை முறியடித்து நமது பாரம்பரியம்மிக்க சமயத்தையும் – சமயவழிப்பட்ட பண்பாடுகளையும் காப்பதில் – அனைவரும் உரிய பங்குகொண்டு பணியாற்றி விழிப்புடன் செயல்படுவதே இன்றுள்ளசூழ்நிலையில் உண்மையான சமயப் பற்றுகும். இதைவிடுத்து மற்றவர்களைக் குறை கூறுவதாலோ அல்லது பிறமதத்தாரின் தொண்டுகளைப்பார்த்து ஏங்கிநிற்பதாலோ விளையப்போகும் பயன் ஏதுமில்லை. ஒன்றுபடுவோம் – உரிய பங்கு ஏற்போம் – உயர்த்துவோம் – உயர்வோம் என்ற எழுச்சி நம்மவர்களிடையே கிளைத்தெழவேண்டும். இதுவே இன்றைய சவாலுக்கு மாற்றுக அமையமுடியும். எனவே ஒன்றுபடுவோம்; உரியபங்கேற்போம்.

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

**தருமையாதீனத் திருமடத்தில்**
**ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவை ஒட்டி நடைபெற்ற**
**சமயப்பயிற்சி வகுப்புத் தொடக்கநாளில் வழங்கியருளிய**

# ஆசியுரை

10— —1981

" சீரணியும் நுதலின்விழி பழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம தெரிந்திடாமல
தாரணி அன்பரைஆள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணுளன்
பாரணியும் ஞானசம் பந்தன் பாதை
பரமன்இரு சரணமலர் பாலி வாழ்வாம். "

இற்றைக்கு நானூற்றைபது ஆண்டுகளுக்குமுன் இந்த ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஆதிகுருமூர்த்திகள், ஸ்ரீ குரு ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். அவர்கள் ஜீவசமாதிகூடியருளிய புனித இடமே ஸ்ரீ ஞானம் பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாகத் திகழ் கிறது. இத்திருமூர்த்திகளின் குருபூஜைத் திருவிழாவும் ஸ்ரீ ஞான புரீசுவரர் பெருவிழாவும் ஒன்ருகச்சேர்த்து ஒவ்வோராண்டும் கொண்டாடப்பெற்றுவருகிறது. இவ்வாண்டு அவ்விழாக்களை யொட்டி ஐந்து நாட்கள் முன்னதாகவே சமயப்பயிற்சி வகுப்பு தொடங்கப்படுகிறது.

## பயிற்சிவகுப்பு ஏன் ?

சுதந்திரம் பெற்று முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் எது வாழ்வு என்பதனையே மக்கள் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை. பகட்டாக வாழ்வதுதான் வாழ்வு என்று எண்ணுகிற

எண்ணம் கொண்ட மக்களே பல்கிப் பெருகி வருகின்றனர். மனிதர்கள் வாழ்வல்லாதவற்றை வாழ்வாக எண்ணி மயங்கு கின்றனர். அதனால் வல்வினையின் வயப்பட்டு ஆழ்கின்றனர். மேலும்தமக்குத்தாமே கேடுசூழ்ந்துகொள்கின்றனர் முடிவாகத் துன்பக் கடலாகிய வெள்ளத்திலேயே வீழ்ந்துவிடுகின்றனர். இவர்கள் துன்பக்கடலினின்றும் கரையேற வழியிருக்கிறதா? இருக்கிறது இறைவனடிசேர்தலே வழி என்பார் திருவள்ளுவர். வல்வினைப்பட்டு ஆழாமல் காப்பவனை ஏத்தித்துதிப்பதே வழி என்கிறார் மணிவாசகர். இவர்தம் அருள்வாக்கைக் கவனிப் போம்.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே.

இத்திருவாசகப்பாடல் எவ்வளவு எளிமையாக நமக்கு வழி காட்டுகிறது. இது போன்ற கருத்துக்களையெல்லாம் சிந்தித்து நல்ல தீர்வு காண ஒரு சிலராவது முன்வரவேண்டும் என்ற நோக்கில்தான் இந்தச் சமயப்பயிற்சி வகுப்பு நடத்தப்பெற்று வருகின்றது.

## எண்ணமும் வாழ்வும்

மனிதர்கள் எண்ணுகிற எண்ணங்களே அவர்களை வாழ வைக்கிறது என்ற கருத்து வேத, ஆகம, புராண காலங்களி லிருந்து இக்காலம் வரை பலருப எடுத்துக்கூறி வருவதாகும். நம்நாட்டில்மட்டு மில்லாது வெளிநாட்டில் வாழ்வோருங்கூட இக்கருத்தை உடன்பட்டுப் பேசிவருகிறார்கள். ஒருநாட்டின் சூழ்நிலை கெடுகிறது என்றால் அந்நாட்டு மக்களின் எண்ணங் களில் தவறு இருக்கிறது என்பதே கருத்தாகும். இதனையே தனிமனித நிலையில் வைத்து 'எத்பாவம் தத்பவத' என்று வடமொழி கூறுகிறது. எண்ணத்தின்படியே வாழ்வு என்பது இதன் பொருள், " நினைக்கத் தனக்கு " என்பதும், " மனம்போல மாங்கல்யம் " என்பதும் இக்கருத்தையே வலியுறுத்தும்.

## பாரதக் கருத்து

மகாபாரதத்தில் இக்கருத்து நன்கு விளக்கப்படுகின்றது. பஞ்சபாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் இருந்துவிட்டு ஓர் ஆண்டு நாட்டிற்குள் மறைந்து வாழவேண்டும் என்ற

உடன்படிக்கையின்படி விராட தேசத்தில் ஒவ்வொருவரும் மாறுவேடம் கொண்டு மறைந்து வாழ்ந்து வருகின்றனர். பஞ்ச பாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் முடித்து நாட்டிற்குள் ஓர் ஆண்டு மறைந்துவாழ்கிறார்கள் என்பதை அறிந்த துரியோதனன், அவர்களை இச்சமயத்தில் கண்டுபிடித்து, மீண்டும் வனவாசம் அனுப்பவேண்டும் என்று எண்ணுகிறான். அதனால் பாண்டவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய, பலரைப் பல இடங்களுக்கும் அனுப்புகின்றான் அவர்கள் கண்டுபிடிக்க இயலாமல் திரும்பி வந்துவிடுகின்றனர். அப்பொழுது பீஷ்மர் துரியோதனனைப் பார்த்து, "இப்படியெல்லாம் தேடினால் அவர்களைக் கண்டுபிடிக்கமுடியுமா? எந்த நாட்டில் மக்கள் மகிழ்ச்சியோடும் வளத்தோடும் இருக்கிறார்களோ அந்த நாடே அவர்கள் வாழும்இடம் என்று கண்டு கொள்க" என்று அறிவுறுத்துகின்றார். துரியோதனனும் அதனைக்கேட்டு, விராடதேசந்தான் வளத்தோடும் செழிப்போடும் இருக்கிறது என்பதனை அறிந்து அங்கேசென்று அவர்களைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்கின்றான்.

## இன்பமும் துன்பமும் :

இதிலிருந்து நல்லோர்கள் வாழும் இடம் வளம் குன்றாமல் இருக்கும் என்பது உண்மையாகிறது. திருமூலர் தம் திருமந்திரத்திலும் இக்கருத்தினை விளக்கியருளுகின்றார்.

"இன்பமும் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
என்ப; இறைநாடி நாடோறும் நாட்டினின்
மன்பதை செப்பஞ்செயின் வையம் வாழுமே"

எனும் இப்பாடலில், ஒருநாட்டில் இன்பமும்துன்பமும் விளைவது அந்நாட்டிலுள்ள மக்களின் நல்லசெயல் - அற்பச்செயலால் தான் என்று விளக்கியருளுகின்றார். மேலும் மக்களை ஆளுகின்ற மன்னனும் குறை வேண்டினார்க்குக் குறை தீர்த்தும், முறை வேண்டினார்க்கு முறைசெய்தும் நன்முறையில் அனைவரையும் ஒப்பக்கருதி ஆட்சி செய்வானேயானால் வையம்வாழும் என்றும் கூறியருளுகிறார். ஆதலின் நெஞ்ச எண்ணங்களே எல்லோரையும் வாழவைக்கிறது என்பது தெளிவாகின்றது. வள்ளுவரும் "உள்ளத்தனையது உயர்வு" என்றருளினார்.

## எது அவவேடம்?

இக்கருத்தமைந்த இந்தப்பாடல் 'அவ வேடம்' என்னும் தலைப்பில் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளது. அவவேடம்

என்ருல் துறவிகள் கொண்டுள்ள வேடக்குறைவு என்பது மட்டும் பொருளில்லை. ஆசிரியர்கள் அவர்கள் நிலையில்தாழ்ந்து போனுலும் அதுவும் அவவேடமேயாகும். காவல்துறையினர் அவர்களின் தகுதியில் குறைந்து போனுலும் அதுவும் அவ வேடமேயாகும். இதேபோன்று நீதிபதிகள், அரசியல்வாதிகள், இன்னும் அனைத்துத் துறையினரும் தங்கள்தங்கள் நிலையில் திரிந்தாலும், தாழ்ந்தாலும் அதுவும் அவவேடமேயாகும். எனவே எல்லாத்தரப்பிலும் தரம்குறையாமல் அனைவரும் நல்ல மனம்கொண்டு வாழத் தலைப்பட்டால் வீடும் நாடும் வளம் பெற்றுத் திகழும் என்பது கருத்து.

**நல்லோரால் நாடு வளம்பெறும் :**

இக்கருத்தினையே புறப்பாடல் ஒன்றும் விளக்குகிறது. ஔவையார் ஒருநாட்டினைப்பற்றிப் பாடும்பொழுத ஒருநாடு, நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும் மேடாக இருந்தாலும் பள்ளமாக இருந்தாலும் அதில்வாழும் மக்கள் நல்லவர்களாக வாழ்வார்களே ஆனல் அந்நாடும் வளமுற்றிருக்கும் என்று பாடுகின்ருர்.

“ நாடா கொன்ருே ; காடா கொன்ருே;
அவலா கொன்ருே ; மிசையா கொன்ருே;
எவ்வழி நல்லவர் ஆடவர்;
அவ்வழி நல்லை வாழிய நிலனே ”

என்பது அப்பாடலாகும்.

எனவே மக்களின் மனப்போக்குக்கு ஏற்பவே வாழ்வும் தாழ்வும் அமையும் என்பதனை மகாபாரதமும், திருமந்திரமும். புறப்பாடலும், பிற அறிஞர்களின் கூற்றும் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. இதனை நன்குணர்ந்து நாடு வளம் பெறத் திட்டங்கள் பல தீட்டுவதோடு மனத்தையும், வாக்கையும். செயலையும் தீதின்றிப்பழக்கிவைத்துக் கொள்வதே தக்கதாகும். இக்கருத்தைச் சிந்திப்பதே இன்றைய சிந்தனையாகக் கொள்வோம்.

இங்கு வந்துள்ள பயிற்சியாளர்களும் பிறரும் இந்நற் சிந்தனையை மறவாது நல்லன கற்று, நல்வழி நின்று, நலம்பல பெற்று, நாடும் வீடும் நீடுவாழச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

நன்செயல் நாளும் வளர்க.
புன்செயல் நாளும் தளர்க.

# வாசகர்கள் சிந்தனைக்காக

## [ஓர் அமெரிக்கக் கடிதம்]

[சிதம்பரம், கனகசபைநகரைச் சேர்ந்த விளாகம் திரு. எஸ். இராமலிங்கம் பிள்ளை அவர்கள் அமெரிக்காவிலிருந்து ஒரு கடிதத்தை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்திருமுன்பிற்கு எழுதியுள்ளார்கள். அமெரிக்க நாட்டில் நிலவும் கல்விமுறை, அங்கே வளர்ந்துவரும் சைவ வழிபாட்டு நிலையங்கள், கிருத்துவ சமயத்தார் மேற்கொள்ளும் சமயப்பணிமுறைகள் போன்ற பல செய்திகளைக் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ள இந்தக் கடிதத்தை - நமது சமய வளர்ச்சிக்கு - நாம் மேற்கொள்ளவேண்டிய நெறிமுறைகளைச் சிந்திப்பதற்கு உதவியாக வாசகர்களுக்குத் தெரிவிக்கின்றோம். ]

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது திருவடி பணிந்து, விளாகம் இராமலிங்கம் எழுதிக்கொண்டது.

### ஹவாய் சைவ சித்தாந்த சர்ச்

நான் இங்குவந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகிறது. எனது 2ஆவது பையன் Mr. பாலமோகனுடன் தங்கியுள்ளேன். அவனுக்குச் சென்ற மாதம் பெண்குழந்தை பிறந்து, சௌகரியமாக உள்ளது. இங்கு மோகனும் மற்றவர்களும் தங்கள் [illegible] மிக சௌகரியமாக இருக்கிறார்கள். நான் இங்கு [illegible]. ஹவாய் சைவசித்தாந்த சர்ச்சிலிருந்து கடிதம், சில [illegible] பிரசுரங்கள், விபூதி குங்குமம் வந்தன. மோகனும் அந்தச் சித்தாந்தசர்ச்சில் உறுப்பினராக இம்மாதம்முதல் சேர்ந்துள்ளான். அதற்கான தொகையும் அனுப்பியுள்ளான்.

### அமெரிக்காவில் இந்து ஆலயங்கள்

இங்கு அமெரிக்காவில் சில நகரங்களில் (கோயில்) நமது ஆலயங்கள் கட்டிவருகிறார்கள். Los Angels ல் சென்றமாதம், விநாயகர்கோயில் கட்டி, குடமுழுக்கு நடந்தது. இங்கிருந்து அது 2000 மைல் உள்ளதால் நான போகமுடியவில்லை. அதைச் சேர்ந்தாற்போல், மீனாட்சிகோயில் கட்டுகிறார்கள். அதில் சிவனையும், விஷ்ணுவையும் பிரதிஷ்டை செய்கிறார்கள். எனது

பையன்கூட 1000 டாலர் அனுப்பியுள்ளான். Pittsburg ல் ஒரு வேங்கடேசப்பெருமாள் ஆலயம் கட்டி உள்ளார்கள். அடுத்தமாதம் அந்தக் கோயிலுக்குப் போவதாக உள்ளோம். Hoston ல் ஒரு சிவாலயம் கட்டுகிறார்கள். Newyork ல் ஒரு சிவாலயம் உள்ளது. September ல் நாங்கள் அங்கு சென்று தரிசிப்பதாக உள்ளோம். இங்கு எனது பேத்தி ஒரு சர்ச்சைச் (Church)சார்ந்த பள்ளியில் சேர்ந்துபடிக்கிறது. அப்பள்ளியின் ஆண்டுவிழாவுக்குச்சென்று வந்தோம். மிகச்சிறப்பாகநடந்தது. அந்தப் பள்ளிக்குச் சென்றுவருபவர்கள் எல்லோரும் எடுத்துச் செல்லும்படி, பல துண்டுப் பிரசுரங்கள் (இனமாக) வைத்து உள்ளார்கள். கிருஸ்துவைப் பற்றிய சிறுசிறு பிரசுரம், 'ஏன் குழந்தைகளை மத பள்ளியில் சேர்க்கவேண்டும்' தினம் படிப்ப தற்காக 'அருள் வாக்குகள்' பைபிளிலிருந்து எடுத்து விளக் கத்துடன் கூடிய சிறிய புத்தகம், இப்படி பல வைத்துள்ளார்கள். நான்கூட அவைகளை எடுத்துவந்து படித்துவருகின்றேன். இவைகளைப் பார்க்கும்போது, நாமும் சில பள்ளிகளில் இது போல் ஏன் செய்யக்கூடாது என்ற எண்ணம்தான் தோன்றிற்று. நான்மட்டும் எண்ணி என்ன பிரயோஜனம்! மற்றவர்களின் ஒத்துழைப்பு இருந்தால் இதுபோல் எல்லாம் செய்ய முடியும். அப்பள்ளியின் ஆண்டு விழாவைப்போல் சிறப்பாக நம பள்ளி களில் ஒரு விழாகூட நடக்காது. விழாவுக்கு எல்லாக் குழந்தைகளின் பெற்றோர்களும் வந்திருந்தார்கள். இன்னும் ஓரிரு பள்ளிகளையும் சென்று பார்ப்பதாக உள்ளேன். (இப் போது விடுமுறை) நான் பள்ளி திறந்ததும் பார்க்க உள்ளேன்.

## மதப்பற்று மிக்க விவசாயிகள்

நான் இங்கு 2 சிறு விவசாயப் பண்ணைகளைச் சென்று பார்த் தேன். ஒருவிவசாயியின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவரு டைய பண்ணையை, எனக்குக் காரில் அழைத்துச்சென்று சுற்றிக் காட்டினார். சோளமும், சோயாபீன்ஸும் போட்டுள்ளார்கள். இங்கு நெல் பயிர் கிடையாது. கோதுமைதான் உண்டு. அந்த விவசாயி கடைசியாக ஒரு சிறு சர்ச்சுக்கு அழைத்துச்சென்று காட்டினார். அந்தச் சர்ச்சிலும் Sunday School என்று பின்புறம் ஒரு Room வைத்துள்ளார்கள். அதில் சிறு குழந்தைகளுக்கு (5 வயதுக்குமேல்) மத சம்பந்தமாகச் சில பாடங்களையும் சொல்லிக் கொடுப்பார்கள். கடைசியாக எனக்கு ஒரு Bible (பைபிள்) கொடுத்துள்ளார். மிக அன்பாக நடத்தினார். அப்படி இங்கு விவசாயிகள்கூட மதத்தில் மிக ஆர்வமாக உள்ளதைக் காணும்போது, எனதுமனதில் நமது மதத்தவர்களை நினைத்துச் சற்று வருத்தம் ஏற்பட்டது.

## ஓய்வு நேரத்தில் மதப்பிரசாரம்

நான் பக்கத்தில் உள்ள ஒரு பெரிய நகரத்துக்கு (கட்லூர் போல உள்ள) ஒரு கடைக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு இந்தியர் குடும்பத்துடன் வந்திருந்தார். (இந்தப் பக்கத்தில் இந்தியர்களதிகமில்லை) நான் அவரை நகரத்தார்சமூகத்தைச் சேர்ந்தவர் என எண்ணினேன். பிறகு பேசிக்கொண்டிருந்த போது, அவர் ஆந்திராவைச் சேர்ந்தவர், கிருத்துவர் எனச் சொன்னார். என்ன செய்துவருகிறீர்கள் என விசாரித்தேன். ஒரு கம்பெனியில் வேலையில் இருப்பதாகவும், அத்துடன் வார முடிவில், ஒரு சர்ச்சில் மதபிரசங்கங்கள் செய்வதாகவும் தெரிவித்தார். அப்படி கிருத்தவர்களுக்குத் தன் மதத்தில் ஒரு தனிப் பற்று உள்ளது. நம்மதத்தவர்களுக்குக் கோயிலுக்குச் சென்று ஆண்டவனுக்கு, அர்ச்சனை, அபிஷேகம் செய்வதுடன் மத விஷயம் முடிந்துவிடுகிறது. இதைச் சுயநல பக்தி என்றுதான் சொல்லலாம். இந்த விதத்தில் நம்மவர்களின் மனட்போக்கும் மாற வேண்டும்.

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

இங்கு T. V. யில் Horn of Africa என ஒரு படம் காண்பித்தார்கள். ஆப்பிரிக்காவின் கீழ்க் கரையில் உள்ள இரு நாடுகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக நடக்கும் போரினால் (யுத்தம்) அங்குள்ள சில ஆதிவாசிகள், வீடு எல்லாம் இழந்து, பாலைவனப்பகுதியில் மரங்களுக்கு அடியில், வறுமையில் வசிக்கிறார்கள். பசி, பட்டினி, நோய் இவைகளினால் தினம்பலர் மடிந்து கொண்டிருக்கிறார்கள். அந்த 2 நாடுகளும அவர்களைக்கவனிக்கவில்லை. இங்கு அமெரிக்காவின் California விலிருந்து சுமார் (10, 000 மைல்களிலிருந்து) சில மிஷனரியைச் சேர்ந்தவர்கள், அந்த மக்களிடையே சென்று தொண்டு செய்கிறார்கள். நாம் அந்த மக்களைப் பார்ப்பதற்குக்கூட அருவருப்படைவோம். அப்படி அழுக்காகவும், நோய், சிரங்கு, உடல்புண் என்று பார்க்கவே அருவருப்பாகவே உள்ளார்கள். அவர்களைத் தொட்டும், தூக்கிவந்தும் வைத்தியம் செய்கிறார்கள். உணவு கொடுக்கிறார்கள். அப்போது நான் நினைத்துக்கொண்டேன் :- (கிருத்துவ மதத்தினராக இருந்தாலும் அவர்களை என்னால் பாராட்டாமலிருக்க முடியவில்லை) நிச்சயம் இந்தத் தொண்டர்கள்தாம் ஆண்டவன் அருகில்இருப்பார்கள் எனஎண்ணினேன்.

நமது மதத் தத்துவங்கள் சிறந்ததாக இருக்கலாம். ஆனால் கிருத்துவர்கள் தொண்டில் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

இது போல் நமது மதத்தில் சில மிஷனரி ஏற்பட்டு, இது போல் நாமும் தொண்டு செய்தால்தான் நமது மதம் சிறக்க முடியும் என்று என் எண்ணங்கள் ஓடின. அந்த மிஷனரி குழுவில் பெண்களும் இருந்தார்கள்.

## நாமும் இவ்வாறு பணி செய்யவேண்டும்

மேலும் இங்கு ஒரு பத்திரிகையில் நமது சிவனைப்பற்றி ஒரு கட்டுரை படித்தேன். "India's divine art reveals a God as savant and roque" என்பது கட்டுரை. அதில் சிவன் குடித்து விட்டு, நந்தியின் மேலிருந்து கீழேவிழுந்து நிலைதடுமாறி உள்ளார். அந்தக்காட்சியைப் பார்வதி தன் (மகன்கள்) விநாயகருக்கும், சுப்பிரமணியருக்கும் சுட்டிக்காட்டுவதாக ஒருபடம், இப்படி ஒரு மனவேதனைபடக்கூடிய அளவு நமது நாட்டில் சில கதைகள், சில படங்கள் உள்ளன. அந்தப் படத்தைத்தான் அச்சிட்டுள்ளது. இந்த பத்திரிகையை எனது மருமகளின், சிநேகிதி (அமெரிக்க மாது) கொண்டு வந்து மருமகளிடம் கொடுத்து விளக்கம் கேட்டார்கள். அதைத்தான் நான் படிக்க நேரிட்டது. அந்த பத்திரிகையின் Copy ஒன்று கிடைக்குமா என முயற்சித்துக்கொண்டுள்ளேன். இப்படி உள்ளகதைகள் மாறி நல்ல மதசம்பந்தமான போதனைகள், எளிய மக்களுக்கும் புரியக்கூடிய அளவில்சிறுசிறு பிரசுரங்கள்வெளியிடவேண்டும் திரும்பத்திரும்ப தேவாரப்பாடல்களை - தெய்வ வழிபாட்டுப் பாடல்களைமட்டும் அச்சிட்டு வெளியிடுவதைவிட, (அவைகளை எளிய மக்கள் புரிந்துகொள்ளுவது கஷ்டம்) கிறித்துவ வெளியிடுகள்போல்;பொன்மொழிகள், எளியமுறையில் பிரார்த்தனை, வழிபாட்டுமுறை. தத்துவங்கள் சிறுபிரசுரங்களாக வெளியிட்டால் மிகப் பயனுள்ளதாக இருக்கும். சில ஆங்கிலத்தில் இருந்தால்கூட நல்லது. ஆங்கிலத்தில் சிறுபுத்தகமாக வெளியிட்டால், நமது மதத்தைப்பற்றி மற்றவர்கள் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். இங்கு ஆஸ்பத்திரிகளில் ஒவ்வொரு படுக்கைக்குப் பக்கத்திலும் Bible வைத்துள்ளார்கள்.

## சிதம்பரத்தில் ஒரு பள்ளி அமைப்பேன்

அந்த வகையில் ஹவாய் சைவ சித்தாந்த சர்ச் செய்யும் தொண்டு (ஆங்கிலத்தில் குறள் வெளியிடுகிறார்கள்) சிறப்பு உடையதாகும். அவர்களுடன் நாம் நல்ல தொடர்புகொண்டு உதவி செய்யலாம் - இதுபோல் இன்னும் எழுதிக்கொண்டிருந்தால், கடிதம் நீண்டுகொண்டே போகும் - ஆதலால் இந்து மதத்தவர்களான நாமும் புதிய வகையில் முயற்சிகொள்ள

வேண்டுமென்ற என் விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன், நான் இன்னும் 3 மாதங்களில் திரும்புகிறேன். என்னுல் ஆன அளவு ஒருபள்ளியையாவது, எப்படியாவது சிதம்பரத்தில் துவக்க முயற்சித்து செய்வதாக உள்ளேன். மகாசந்நிதானம் அவர்களின் ஆசியினுலும், ஆண்டவன் அருளினுலும் எனது முயற்சி வெற்றிபெறும் என நம்புகிறேன்.

நான் ஏதாவது தவருக எழுதியிருப்பின் மன்னித்தருள வேண்டிக்கொள்கிறேன். இங்கு வந்து எல்லாவற்றையும் பார்க்கும்போது, எனது மனதில் ஏற்பட்ட எண்ணங்கள் காரணமாக எழுத விரும்பினேன். இங்கிருந்து ஹவாய் சைவசித்தாந்த சர்ச்சுக்கு, இங்குள்ள சில நண்பர்களின் விலாசம் கொடுத்து உறுப்பினர்கள் பாரம் அனுப்பச்சொல்லி எழுதியுள்ளேன். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆசியினுல் யாவும் சிறப்புற நடக்க அருளவேண்டும்.

தங்கள் திருவடிபணியும்

S. ராமலிங்கம்

---

அட்டைப்படம்:

வெள்ளிக்கிழமை, ஒன்பது கிரகங்களுள் சுக்கிரனுக்குரிய நாள். சுக்கிரன் தன்னை வழிபடுபவர்களுக்கு நலம்பல அளித்து, செல்வ வளத்தையும் வழங்குபவன். சுக்கிரனுக்கு அதிதெய்வம் அம்பாள் ஆதலின் வெள்ளிக்கிழமைகளில் அம்பாள்வழிபாடு சிறப்பாக நிகழ்கிறது. அதிலும் தட்சிணயனத் தொடக்கமாகிய- சூரியன் தெற்குநோக்கிச் செல்லும் ஆடிமாதத்திலும் உத்தராயணத் தொடக்கமாகிய - சூரியன் வடக்குநோக்கிச் செல்லும் தைமாதத்திலும்வரும் வெள்ளிக்கிழமைகளில் அம்பாளைவழிபடுவது மிக்க நலந்தருவதாகும். அதுகருதியே எல்லாக்கோயில்களிலும் ஆடி - தைமாத வெள்ளிகளில் சிறப்பாக அம்பாளுக்கு வழிபாடு நடத்தப்பெறுகிறது.

பஞ்சபூதத்தலங்களுள்பிருதிவித்தலமாகியதிருவாரூர்த்திருக்கோயிலில் எழுந்தருளி அருள்வழங்கும் அன்னை அருள்மிகு நீலோத்பலாம்பாள் திருவுருவம் இவ்விதழில் காட்சிதருகிறது. அம்பாளின் இடத்திருக்கை தோழியின் தோள்மீது விளங்கும் முருகப்பெருமான் திருக்கரத்தைப்பற்றிய நிலையில் விளங்குவது காணுதற்குரியது.

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு

தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் அவர்களின் ஆனிமாத ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத்திரு நாள்ஆலயவழிபாடு 4—7—81 சனிக்கிழமையன்று திருவாரூர் – திருவாரூர் அரநெறி – திருவாரூர்ப் பரவையுண்மண்டளி ஆகிய மூன்று திருக்கோயில்களில் சிறப்பாக நடைபெற்றது. அவ்வத் திருக்கோயில்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடை பெற்றன. திரு. கல்யாணசுந்தரதேசிகர், திரு. திருஞானசம்பந்த தேசிகர், திரு. கணேசதேசிகர் ஆகியோர் அவ்வத்தலத்திருப் பதிகங்களைப் பாராயணம் செய்தனர். மாலை 7 மணியளவில் தேவாசிரயமண்டபம் அருள்மிகு தியாகராஜப் பெருமான் சந்நிதியில் கீதைப்பேரறிஞர். திரு. க. பழனியாண்டிப்பிள்ளை அவர்கள் தலைமையில் புலவர்மணி திரு. மு. இரத்தினதேசிகர், வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ., வித்துவான் திரு. மு. சுந்தரராஜன் எம். ஏ., வித்துவான் திரு. அ ஞானச் செல்வன் எம். ஏ., வித்துவான் திரு. இரா. சண்முகவடிவேலு எம். ஏ., வித்துவான் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., ஆகியோர். சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அச்சிடப் பெற்ற தலத்திருப்பதிகங்கள் அன்பர்கட்கு வழங்கப்பட்டன.

## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சமய குரவருள் ஒருவராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா ஆனிமகநாளாகிய 5—7—81 ஞாயிறன்று மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. காலை ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமி களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. பின்னர் ஆதீனத் திருமடத்திலுள்ள ஸ்ரீசொக்கநாதப் பெருமான் சந்நிதியில் ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களும் ஓதுவா மூர்த்திகளும் திருவிளையாடற்புராணப் பகுதிகளைப் பாராயணம் செய்தனர். மாலை 7– மணியளவில் திருக்கோயிலில் வித்துவான் திரு. மு. ஆறுமுகதேசிகர், 'திருவாசகம்' என்னும் பொருளிலும், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், பி. லிட்., 'திருக் கோவையார்' என்னும் பொருளிலும் உரையாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடு ஆற்றியபின்னர் ஆதீன ஓதுவாமூர்த்திகளின் திரு வாசக பாராயணத்துடன் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் திருவீதி உலாக் காட்சி சிறப்பாக நடைபெற்றது.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் ( கிளை ) மாயூரம்

மாயூரத்தில் ஸ்ரீகுருஞானசம்பந்தர் பணிமன்றக்கிளை தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் சென்ற விசயதசமியன்று ( 19—10—1980 ) தொடங்கிவைக்கப்பட்டது. இம்மன்றம் சமுதாயப் பணியும் சமயப்பணியும் ஆற்றிவருகின்றது. சமுதாயப் பணியாற்றும் வகையில் பாலர் பள்ளியும், இலவசமருத்துவமனையும், சமயப்பணிபுரியும் வகையில்வாரவழிபாடும் சமயச்சொற்பொழிவுகளும் நடத்திவருகின்றது.

இதுவரையில் சமயச் சொற்பொழிவாக 1. வார வழிபாடும் அதன் நோக்கமும். 2. திருமுறைகளின் பெருமை. 3. திருக்கோயில்களும் அதன் தத்துவமும். 4. அட்ட வீரட்டானம். 5. சப்தவிடங்கர் ஆகிய பொருள்பற்றி வரகடை திரு. பொன். சம்பந்தம் பிள்ளை அவர்களும், புலவர் திரு. மு. பூவராகவன் பி. ஏ., பி. இடி., அவர்களும் சொற்பொழிவாற்றியுள்ளார்கள்.

நிகழும் துன்மதி ஆண்டு சித்திரைத்திங்கள் முதல் வார வழிபாட்டிற்குப்பின்னர் இரவு 7 மணியளவில் பெரியபுராணத் தொடர்ச் சொற்பொழிவு புலவர் திரு. மு. பூவராகவன் பி. ஏ., பி, இடி., அவர்களால் நிகழ்த்தப்பெற்றுவருகின்றது. சென்ற ஞாயிற்றுக்கிழமை (5—7—81) வாரவழிபாட்டிற்குப் பின்னர் " திருநாளைப்போவார் நாயனர் " என்பதுபற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

## ( கிளை ) மதுரை

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜைத் திருநாள் விழா 5—7—81 அன்று பணிமன்றச் சார்பில் திருவாதவூர் ஸ்ரீ திருமறைநாத சுவாமி திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதல் நிறைவு விழாவாக மிகச்சிறப்புடன் நடைபெற்றது. பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனர் தலைமையில், திரு. பி. டி. ஆர். கமலத் தியாகராஜன் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்த, திரு. ச. தண்டபாணிதேசிகர், திரு. மு. சண்முகம்பிள்ளை, திரு. கோவிந்தராஜனர், திரு. மீ. கந்தசாமிப்புலவர், திரு. இராமச்சந்திரன், திரு. ஆ. சண்முகவேலன், திரு. தி. சு. கோவிந்தசாமி ஆகியோர் திருவாசக ஆய்வுச் சிந்தனையுரையாற்றினர். நண்பகல் ஸ்ரீ காசி மடத்தின் சார்பில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் மகநினைவு அன்னம் பாலிப்பு நிகழ்வுற்றது. வழிபாடு, சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகளில் அன்பர்பலர் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

# திருவாரூர்த் தலச்சிறப்பு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகா எம். ஏ.,

தென்னாட்டில் விளங்கும் சிவதலங்கள் பலவற்றுள்ளும் பழமையும் பெருமையும் உடையது திருவாரூர். இத்தலம், இறைவன் ஐம்பெரும் பூதவடிவாக விளங்கும் உண்மையைத் தெரிவிக்கும் பஞ்சபூதத் தலங்களுள் பிருதிவித்தலமாகத் திகழ்வது. பிறக்க முத்தி தருவது. பூமகளுக்கு இதய கமலமாக இலங்குவது. புற்றிடங்கொண்ட புராதனனையும், திருமால் இந்திரன் ஆகியோரால் வழிபடப்பெற்று, முசுகுந்த சோழமன்னனால் விண்ணுலகிலிருந்து கொண்டுவந்து தாபிக்கப்பெற்ற தியாகராஜப்பெருமானையும் பெற்றுள்ள பெருஞ்சிறப்பினை உடையது. சப்தவிடங்கத் தலங்களில் தலையானது. எல்லாத் தலங்களிலும் உள்ள சிவகலைகளும் சாயரக்ஷை எனப்படும் திருவந்திக்காப்பு நேரத்தில் இத்தலத்தில் கூடுவதாகக் கூறப்படுகிறது. திருவாரூர்த் தேர் அழகு என்பது பழமொழி. இத்தலத்தேர் பெரியது; மிக்க அழகுடையது, 'ஆழித்தேர்' எனத் தேவாரத்திருமுறையில் பாராட்டப்பெறுவது. சோழமன்னர்களின் தலைநகரங்கள் ஐந்தனுள் ஒன்றாய்விளங்கிய தொன்மையுடையது. மனுநீதிச்சோழன் இருந்து அரசாண்டது. சமயகுரவர் நால்வராலும், மற்றும் பிற திருமுறை ஆசிரியர்களாலும், அருளாளர்களாலும் போற்றப்பட்டது. சீகாழிக்கு அடுத்த நிலையில் 34 தேவாரத்திருப்பதிகங்களைப் பெற்றது. தஞ்சைக்கு அடுத்ததான பெரியகோயிலைப் பெற்றது. சிற்பம் சித்திரம் தெய்விகம் ஆகிய அனைத்தழகுகளும் நிரம்பப்பெற்றது.

நீரால் விளக்கெரித்த நமிநந்திஅடிகள், சமணர்களின் இன்னல்களை எதிர்த்துக் கமலாலயத் திருக்குளம் அகழ்ந்த தண்டியடிகள் முதலிய நாயன்மார்களவதரித்த சிறப்பினை உடையது. திருத்தொண்டத் தொகையைச் சைவ உலகிற்குத் தந்து, இறைவனுக்குத்தோழராய்ப் பலவகை அருள்விளையாடல்களைப் புரிந்து, இத்தலத்து இறைவனிடம் பேரன்பு செலுத்திய சுந்தரர் பரவையாரோடு பல ஆண்டுகள் வாழ்ந்தருளிய சிறப்பு உடையது. பெரியபுராணப் பெருங்காப்பியத்துக்குரிய நகரமாய் விளங்குவது. தருமையாதீனத்தை நிறுவியருளிய ஸ்ரீ குருஞான

சம்பந்தரின் ஞானாசிரியராகிய கமலை ஞானப்பிரகாசர் வாழ்ந்த பெருமையுடையது. பெயரைச்சொன்னாலே முத்திதரும் தலங்களுள் ஒன்றாக விளங்குவது.

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றம்மறைக் காடுஅருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

என்பது குருஞானசம்பந்தர்வாக்கு. இக்கோயிலபணிகட்கென அமைந்துள்ள கட்டளைகள் பதின்மூன்றனுள் இராஜாங்கக் கட்டளை, தருமையாதீன அருளாட்சியின்கீழ் சிறப்புற நிர்வகிக்கப்பெற்று வருகிறது.

திருவாரூரில் தேவாரப்பாடல்பெற்ற மூன்று தலங்கள் உள்ளன. முதலாவது தியாகேசர் கோயில் எனப்படும் பூங்கோயில் (திருமூலட்டானம்) ஆகும். இரண்டாவது தியாகேசர் கோயிலின் தெற்குத் திருச்சுற்றிலுள்ள அரநெறிக்கோயிலாகும். மூன்றாவது கீழவீதியில் தேரடியில்உள்ள பரவையுண்மண்டளிக் கோயிலாகும். இம்மூன்றுகோயில்களும் சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 87, 88, 89 ஆவது திருக்கோயில்களாக எண்ணப்பெறும். திருவாரூர் தஞ்சைமாவட்டம் நாகைதாலுக்காவைச் சேர்ந்தது.

**வழி :**

மாயூரம், காரைக்குடி, நாகை, தஞ்சை ஆகிய நகரங்களை இணைக்கும் இரயில்சந்திப்பை உடைய இந்நகருக்குத் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்துசேர இரயில் வசதிகளும், பேருந்து வசதிகளும் உள்ளன. இரயில் நிலையம், பேருந்து நிலையங்களிலிருந்து வடக்கே ஒரு கி. மீ. தூரம்சென்றால் திருக்கோயிலை அடையலாம். பேருந்துகளில் வருவோர் கோயிலின் தெற்கு அல்லது மேற்கு வடக்கு வீதிகளில் இறங்கிக் கோயிலை அடையலாம்.

**தலப்பெயர் :**

இத்தலத்துக்குக் கமலாலயபுரம், க்ஷேத்ரவரபுரம், ஆடகேசுவரபுரம், மூலாதாரபுரம், சக்திபுரம், கந்தபுரம் முதலிய பல பெயர்கள் உள்ளன. திருவாரூர் என்பதே மக்கள் வழக்கில் கூறப்படும்பெயர். திருவாரூர் என்பதற்குத் திருமகள் வழிபட்டு

மாங்கல்யம் வளரப்பெற்ற ஊர் என்றும், செல்வம்நிறைந்த ஊர் என்றும், சோழமன்னர்க்குரிய ஆத்திமரங்கள் நிறைந்த ஊர் என்றும் பெயர்க்காரணங்கள் கூறப்படுகின்றன. திருமகள் வழிபட்டதலம் என்பதைத் 'திருவினள் சேர்வதற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே' என்ற அப்பர் திருவாக்காலும் பிற தேவாரத் திருப்பாடல்களாலும் அறியலாம்.

### கோயில்கள் :

இத்தலத்தில் பிரமன்கோயில், துருவாச ஆசிரமம், பரவையுண் மண்டளி, திருநீலகண்டர்கோயில், தண்டபாணிகோயில், பரவையார்கோயில், இராஜ துர்க்கை கோயில், நடுவண நாதர் கோயில், மாற்றுரைத்த விநாயகர்கோயில், சோமநாதர்கோயில், குளுந்தாளம்மன் கோயில், ஐயனர் கோயில், உருத்திரகோடீசுவரர்கோயில், குமரகோயில், எல்லையம்மன்கோயில், மாணிக்க நாச்சியார் கோயில் முதலிய பல கோயில்கள் உள்ளன.

### தீர்த்தங்கள் :

திருவாருருக்குப் பேரழகு தருவன தியாகராஜர் திருக்கோயிலும், கமலாலயமும், ஆழித்தேருமாகும். இத்தலத்தில் உள்ள கோயிலும் குளமும் ஓடையும் ஐந்தைந்து வேலி நிலப்பரப்பு உடையன. 'கோயில் ஐந்துவேலி, குளம் ஐந்துவேலி, செங்கழுநீர் ஓடை ஐந்துவேலி' என்பது மக்கள் வழக்கிலுள்ளதொடர். தேவாரத் திருமுறையிலும் 'அஞ்சனை வேலி ஆரூர் ஆதரித்து இடம் கொண்டாரே' எனக் காணப்படுகிறது. கமலாலயம் திருக்கோயிலுக்கு மேல்பாலுள்ளது. இது தேவதீர்த்தம் எனப்படும். மிகப்பெரியதீர்த்தம். சுந்தரர் திருமுதுகுன்றத்துஇறைவன் அளித்த பன்னிராயிரம் பசும்பொன்னை மணிமுத்தாற்றில்இட்டு திருவாரூரில் இக்குளத்திலே மூழ்கி எடுத்தார் என்ற வரலாறு பெரியபுராணத்துள் விளங்கித் திகழ்வது. குளக்கரையில் சுந்தரர் எடுத்த பொன்னை உரைக்கச்செய்து மாற்றுப்பார்த்த இடத்தில் உள்ள மாற்றுரைத்த பிள்ளையார் கோயில் இவ்வரலாற்றுக்குச் சான்றுகவிளங்குகிறது. தண்டியடிகள் நாயனர்வெட்டித்திருத்திய குளம். வன்மீகநாதர் வெளிப்பட்டகாலத்தில் உடன்தோன்றியது. பாதாள கங்கை பாய்வது. பதினறுகோடிகளையும் காசிக் கங்கையைப்போல 64 தீர்த்தகட்டங்களையும் உடையது. இக் குளத்தில் பங்குனி உத்திரத்தில் சிறப்பாகத் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது. குளத்தின்நடுவே நடுவணநாதர் ஆலயம் உள்ளது.

இத்தலத்தில் மற்றும் சங்கதீர்த்தம், சரசுவதி தீர்த்தம், செங்கழுநீர்ஓடை, ஞானப்பிரகாசகுளம், ஓடம்போக்கியாறு முதலிய தீர்த்தங்கள் பலவும் உள்ளன.

## கோயிலமைப்பு :

இத்தலத் திருக்கோயிலுக்குப் பூங்கோயில் என்பது பழமையான பெயர். வடமொழியில் கமலாலயம் என்பர். கோயில் என்ற பெயர் சிதம்பரத்தையும், பூங்கோயில் என்ற பெயர் திருஆரூர்க் கோயிலையும் குறிப்பனவாயுள்ளன. 'பூங்கோயிலுட் புகுந்து போகாதிருந்தாரே' என்பது அப்பர்தேவாரம். கிழக்குப் பார்த்த சந்நிதியை உடைய இத்திருக்கோயிலின் நான்கு திசைகளிலும் நான்கு கோபுரவாயில்கள் உள்ளன. இத்திருக்கோயிலுக்கு அழகு தருவனவும் தனி அமைப்புடையனவாகவும் விளங்கும் கோபுரங்கள் நான்கில் கீழைக்கோபுரம் பெரியது. வாயிலில் விநாயகர்கோயிலும் முருகன்கோயிலும் உள்ளன. வழிபட்டு உள்ளே நுழைந்ததும் வீதிவிடங்க விநாயகரையும் பிரமநந்தி பலிபீடங்களையும் தரிசிக்கலாம். மூன்று திருச்சுற்றுக்களைக் கொண்ட இக்கோயிலில் இராஜகோபுரத்தை அடுத்து வலப்புறமாகத் தெற்குநோக்கி விளங்கும் தேவாசிரயமண்டபம் சமயவரலாற்றுச் சிறப்புடையது.

## தேவாசிரய மண்டபம் :

ஆயிரக்கால் மண்டபம் எனவும், இராஜதானி மண்டபம் எனவும் இதனைவழங்குவர். தேவர்கள் தியாகேசனை வணங்கக் கூடியிருக்கும் மண்டபம் இது. சுந்தரர் திருக்கோயிலுக்குள் செல்லும்போது சிவனடியார்கள் இங்கு நிறைந்திருந்ததைப் பெரியபுராணம் தெரிவிக்கிறது. நிறைசெல்வத் தியாகேசர் ஆழித்தேர் முடித்து மகாபிடேகம்கொண்டு அருட்காட்சிதரும் மண்டபம் இது. தரிசித்துத் திருக்கோயிலை வலம் வரலாம்.

பெரியபிராகாரம் எனப்படும் மூன்றும்பிராகாரத்தில் தருமை ஆதீனத்து இராஜாங்கக்கட்டளைத் தம்பிரான் சுவாமிகளால் திருப்பணிசெய்விக்கப்பட்ட தெற்குக்கோபுரத்தினருகில் பக்த காட்சி மண்டபமும், ஊஞ்சல் மண்டபமும் உள்ளன. அடுத்து நந்தவனம் உள்ளது. மேற்குப்பிராகாரத்தில் துலாபார மண்டபமும் சரசுவதிதீர்த்தமும் உள்ளன. அதனை அடுத்துச் சித்திரகலா மண்டபம் உள்ளது. தியாகராசப்பெருமான் எழுந்தருளி உத்திர பாத தீர்த்தம் கொடுத்து எழுந்தருளும் மண்டபம் இது. கலை வேலைப்பாடுடையது. கோயில் அலுவலகமாகப் பயன்படுகிறது. அடுத்துப் புராணமண்டபம் உள்ளது.

## கமலாம்பாள் கோயில் :

வடக்குப்பிராகாரத்தில் கமலாம்பாள் கோயில் உள்ளது. அம்பிகை தவத்திருக்கோலத்தோடு விளங்குகின்ருர். இது பராசக்தி பீடங்களில் ஒன்று. ஈசானப் பார்வையோடு தனி ஆலயமாக விளங்கும் இக்கோயிலை மக்கள் பயபக்தியோடு வழிபடுகின்றனர். இக்கோயிலில் ஆடிப்பூரவிழா சிறப்புடையது. கோயில் வாயிலில் உள்ள உச்சிட்ட விநாயகரை வழிபட்டு அம்பாள்சந்நிதியை அடைவோம். வாயிலில் அநிந்திதைகமலினி சுதைத் திருவுருவங்கள் உள்ளன. கமலாம்பாள் யோகாசனத்தி லிருந்து அறிவானந்தத்தை அள்ளி வழங்கும் நிலையில் அருட் காட்சிதருகிருர். வழிபட்டு அம்பிகைகோயிலை வலமாகவந்து மேற்குட்பிராகாரத்தில் அக்ஷரபீடத்தைத்தரிசித்துவெளிவந்தால் அடுத்துப் பார்ப்பதீச்சரம் திருக்கோயிலைத் தரிசிக்கலாம். இது மேற்குப்பார்த்த சந்நிதி. கமலாம்பிகையால் தாபித்து வணங்கப் பெற்றவர் எனக் கூறப்படுகிறது. கமலாம்பாள் கோயிலுக்கும் பார்ப்பதீச்சரம் கோயிலுக்கும் இடையில் மூக்குத்திக் கிணறு என வழங்கும் முத்திக்கிணறு உள்ளது.

## ஒட்டுத்தியாகர் :

வடக்குப்பிராகாரத்தில் கோயில் திருமதில் ஓரமாக ஒரு மண்டபமும் கோயிலும் உள்ளன. இது ஒட்டுத்தியாகர்கோயில் எனப்படும். விறன்மிண்டர் சுந்தரரைக் கோயிலுக்குள்போகா மல் தடுக்க, சுந்தரர் தியாகேசனைத் தரிசிக்க இயலாமல் மனம் நொந்தபோது தியாகப்பெருமான் யாருக்கும்தெரியாமல் மறை வாய்ச் சுந்தரருக்குக் காட்சிதந்த இடம். 'ஒட்டியாட்கொண்டு போயொளித்திட்ட உச்சிப்போதன்' எனச் சுந்தரர்தேவாரத்தில் இவர் இடம்பெறுகிருர்.

அடுத்து, தேவாசிரய மண்டபத்தின் எதிரே காவணம் அமைக்க நாட்டிய கருங்கற்றூண்கள் நிற்கின்றன. தேவாசிரய மண்டபத்தின் மேல்பால் நோய்நீக்கும் அருளும் சங்கு தீர்த்தம் உள்ளது. இங்குச் சித்திரைபௌர்ணமியில் தீர்த்தவிழா நடை பெறும்.

## இரண்டாம் பிராகாரம் :

முதற்பிராகாரத்தை இவ்வாறு வலம்வந்து சூரியன்கோபுரம் என வழங்கும் இரண்டாம் கோபுரவாயிலை அடைவோம். இருபுறங்களிலும் விநாயகரும் முருகனும் விளங்குகின்றனர்.

கூடவரையில் விறன்மிண்ட நாயனார் எழுந்தருளியுள்ளார். வழிபட்டு உள்ளே சென்றால், இந்திரன் கொடிமரம்தோன்றும். அதனை அடுத்து நந்தி பலிபீடத்துடன் கூடிட ராஜநாராயண மண்டபம் உள்ளது. பங்குனி உத்திரம் மார்கழித் திருவாதிரை நாட்களில் தியாகேசர் இம்மண்டபத்தில் எழுந்தருளுவார். முகப்பில் விநாயகர் துர்க்கை திருவுருவங்கள் உள்ளன.

**சிவலோகம் :**

இரண்டாம் பிராகாரம் எண்ணற்ற சிவலிங்கப் பிரதிட்டைகள் செய்விக்கப்பெற்று, குவித்தகரம் விரித்தல் செல்லாதவாறு சிவலோகமாகக் காட்சிதருகிறது. கோயில்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. முதலில் தெற்நோக்கிச் சுரநோய் அகற்றும் சுரஹரேசுவரர் விளங்குகிறார். கிழக்குத் திருமாளிகைப்பத்தியில் ஏகாதச லிங்கங்கள் உள்ளன. தெற்குப்பிராகாரத்தில் முசுகுந்த தேவர், உடையார் தேவர், துளசி மகாராஜா பூசித்த லிங்கம், தேவேந்திரன் பூசித்த லிங்கம் முதலிய மூர்த்திகள் தனித்தனிக் கோயில்களில் உள்ளனர். வழிபட்டுத் திருவாரூர் அரநெறித் திருக்கோயிலை அடைவோம்.

திருவாரூர்ப் பூங்கோயிலைச் சூழ இப்பிராகாரத்தின் மூன்று பக்கங்களிலும் அசலேசர், ஆனந்தேசம், விசுவகர்மேசம், சித்தீசம் ஆகிய தனி ஆலயங்கள் பல உள்ளன. அசலேசமே திருவாரூர் அரநெறி எனப்படும் கோயிலாகும்.

**அரநெறி :**

அரநெறி என்பதற்குப் பாவங்களைப்போக்கிச் சிவநெறியை அடைவிக்கும் தலம் என்பது பொருள். நமிநந்தி அடிகள் நாயனார் நீரால் விளக்கெரித்த திருக்கோயில் இது. கர்ப்பக் கிருகம் அர்த்தமண்டபம் மகாமண்டபங்களோடு விளங்கும் இத்திருக்கோயில் சோழர்காலத் திருப்பணிகளோடும் சிற்பங்களோடும் சிறந்து திகழ்கிறது.

திருமாலை கட்டுமிடத்தில் இருந்த பூவை எடுத்து முகர்ந்தமைக்காகச் செருத்துணை நாயனார் பல்லவமன்னர் கழற்சிங்க நாயனாரின் மனைவியாரது மூக்கைஅரிய, கழற்சிங்கர் அப்பூவை எடுத்த தன் துணைவியாரின் கையைத் தடிந்தார். இவ்வண்ணம் சமயத்தொண்டில் கொண்ட உறுதிப்பாட்டை வெளிப்படுத்திய வரலாறு அரநெறிக்கோயிலில் நிகழ்ந்ததைப் பெரியபுராணத் துட்காணலாம். அவ்வரலாறு நிகழ்ந்த திருப்பள்ளித்தாம

மேட்டை இன்றும் திருமாலேகட்டும் இடமாகவே திகழக் காண்கின்ருேம். சமற்காரன் என்னும் மன்னனுல் தாபிக்கப்பெற்ற மூர்த்தி அசலேசர். இத்தலத்தில் சிவராத்திரி வழிபாடு செய்வோர் சிறந்தபயனைப் பெறுவர் எனத் தலபுராணம் கூறுகிறது. மேற்குநோக்கிய சந்நிதி. இறைவன் திருப்பெயர் அருள்மிகு அசலேசுரர். இறைவி திருப்பெயர் அருள்மிகு வண்டார்குழலி அம்பிகை சுவாமிதிருக்கோயிலில் போகசக்தியாக விளங்குவதைக்கண்டு தரிசிக்கலாம்.

இத்தலத்தை வழிபட்டுக்கொண்டு தெற்குப் பிராகாரத்திலுள்ள தக்ஷேசுவரர், மனுச்சக்ரேசுவரர், பகீரதேசுவரர், கைலாசத் தியாகர், பாண்டியநாதர், சப்தமாதர், சப்தரிஷீசுவரர், சேரநாதர் ஆகிய சிவலிங்க மூர்த்திகளை வழிபட்டு ஆடகேசுவரத்தை அடைவோம்,

## ஆடகேசம் :

இது அப்புத்தலம். இங்கு நாகபிலம் ஒன்றுள்ளது. ஒருமுறை வழிபடுவோர் இந்திர பதவியை எய்துவர். இறைவன் அருவத்திருமேனியராய் விளங்குகிருர். வழிபட்டு இக்கோயிலை வலமாக வந்தால் தலமரம் பாதிரியைக் காணலாம்.

அடுத்து, விசுவாமித்ரேசுவரர், மகாபலேசர், இராகுகாலத்தில் மக்கள் பெருந்திரளாய் வழிபடும் வடக்குநோக்கிய ரௌத்திர துர்க்கை, அருணசலேசுவரர் முதலிய மூர்த்திகளை வழிபட்டு மேலைப்பிராகாரத்திலுள்ள ஆனந்தேசத்தை அடைவோம்.

## ஆனந்தேசம் :

ஆனந்தேசத்தில் விநாயகர், ஜேஷ்டாதேவி, கோணப்பிள்ளையார் முதலியோரை வழிபட்டுக்கொண்டு ஆனந்தேசுரரைத் தரிசிக்கலாம். மேற்கு நோக்கிய சந்நிதி. தாமரைப்பூவிற்று வந்த பட்டினசாமி என்னும் செட்டி ஒருவன் விலையாகாததாமரைப்பூக்களை ஒருநாள் ஆனந்தேசுரருக்கு அருச்சித்த புண்ணியப்பயனுல் அரசனுகிக் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசுபுரிந்து ஆண்டுதோறும் வைகாசி விசாக விழாவில் சிறப்புவிழாக்கள் நிகழ்த்தினுன் எனக்கூறப்படுகிறது.

வடக்குப்பிராகாரத்தில் புராணேசுவரர், அனுமந்தேசுரர், விபீஷணேசுவரர், பாலசுப்பிரமணியர், கர்ப்பேசுவரர் ஆகிய சிவலிங்கமூர்த்திகள் விளங்கக் காணலாம். அடுத்து விளங்குவது விசுவகர்மேசம்.

**விசுவகர்மேசம் :**

இக்கோயில் வேலைப்பாடமைந்த கருங்கல் திருப்பணியை உடையது தரிசித்துச் சித்தீச்சரம் திருக்கோயிலை அடைவோம்.

**சித்தீச்சரம் :**

இது மேற்குப்பார்த்த சந்நிதியோடு விளங்குவது. வாயிலில் விநாயகர் பைரவர் உள்ளனர். இக்கோயிலின் மூல இலிங்கம் சித்தீசன் என்பவனால் தாபிக்கப்பட்டது ஆதலின் சுவாமி சித்தீசுரர் எனவும், கோயில் சித்தீச்சரம் எனவும் வழங்கப் படுகிறது. இக்கோயிலின் தெற்குக் கோஷ்டத்திலுள்ள தக்ஷிணாமூர்த்தி மிக்க பெருமையுடையவர். இங்குதான் கமலை ஞானப்பிரகாசர் தருமையாதீனத்தை நிறுவிய ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர்க்கு உபதேசம் அருளிச் சொக்கலிங்கப் பெருமான் பூசையை எழுந்தருளுவித்துக் கொடுத்தார்கள். கல்லாடை அணிந்து காட்சிதரும் இம்மூர்த்தியின் சந்நிதியிலிருந்து பஞ்சாக்ஷரஜெபம் செய்வோர் எல்லாப்பயன்களையும் எய்துவர்.

தருமையாதீனம் 25 வது குருமகா சந்நிதானமாக எழுந்தருளி யிருந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இச்சந்நிதியைத் தகரக்கொட்டகை அமைத்து அழகுபடுத்தியுள்ளார்கள். தரிசித்து, கீழைத்திருமாளிகைப்பத்தியில் விளங்கும் சமயகுரவர் சந்நிதியை வழிபட்டுச் சுவாமி சந்நிதியை அடைவோம்.

**வன்மீகநாதர் சந்நிதி :**

முதற்கோபுர வாயிலின் தென்பால் தட்டம் சுற்றி மண்ட பத்தைக் காண்போம். இங்கு வல்லபைகணபதி விளங்குகிறார். சுவாமிசந்நிதியில் விளங்கும் கொடிமரத்தின் அடியிலுள்ள பொற் கம்ப விநாயகரையும் எதிரே உள்ள அம்பிகை அருள்மிகு அல்லியங்கோதையையும் கும்பிட்டு அழகியான் கோபுரம் எனப்படும் முதற் கோபுரவாயிலில் உள்ள அதிகார நந்தியை வணங்கிக் கோயிலுட் செல்வோம்.

இக்கோயிலின் மூலலிங்கமாக விளங்குபவர் வன்மீகநாதர். இவர் சந்நிதியின் வலப்புறமாக அமைந்த படிக்கட்டின்வழியே ஏறி நர்த்தனமண்டபத்திலுள்ள நந்தி பலீபீடங்களைத் தொழுது, பின்னர் கிளிக்குறட்டில்உள்ள பிரதோஷநாயகர், சந்திரசேகரர் சோமமன்னர், மணிவாசகர், திரிபுரசம்காரமூர்த்திகளை வணங்கி இடப்பக்கவாயிலாகச்சென்று முதலில் அழகிய சோழவிநாயகர்

ஆகிய ஐங்கலக்காசு விநாயகரைத் தரிசித்து, மகாமண்டபம் ஸ்தபன மண்டபங்களைக்கடந்து திருவணுக்கன் திருவாயிலை அடைவோம். சுவாமிசந்நிதி திருமூலட்டானம் எனவும் பூங் கோயில் எனவும் கூறப்பெறும். பெருமான் அருள்மிகு வன்மீக நாதர் நம்முள்ளங்களை வசீகரிக்கும் தன்மையராய் விளங்குகிறார். அருகில் சோமகுலாம்பிகை எனப்பெயரில் பிரியா விடை யம்மை எழுந்தருளியுள்ளார். இனிய தேவாரப்பாடல்களை ஓதி மனமுருகி வழிபட்டு மீண்டும் கீழே இறங்கி வலம்வந்து தியாக ராஜர் சந்நிதியை அடைவோம்.

## தியாகேசர் சந்நிதி :

தியாகேசர் இக்கோயிலின் திருவுலாமூர்த்தியாவார். இவர் சந்நிதியில் சுந்தரர் சேரமான்பெருமாள் ஆகியோர் தியாக ராசரை வணங்கி அவர்தம் அருட்காட்சியைக் கண்டு களித்தவ ராய் நிற்பதைக் காணலாம். இறைவன் வாயிலில், அடியார்கள் குறைதீர்க்க முன் தூது சென்றதுபோலத் திருவடி நோவச் செல்லுதல் ஆகாது; அத்தொண்டுக்கு யானும் துணை நிற்பேன் என்பார்போல் இடபதேவர் நின்றநிலையில் விளங்குவதைக் காணலாம்.

தியாகராஜர் சந்நிதியில் உள்ள மூலதார கணபதியைக் கும்பிட்டு வலமாகவந்து தெற்குத் திருமாளிகைப் பத்தியில் அறுபத்துமூவரைத் தொழுது, அழகிய தென்னந்திருவாசல் வழியே நுழைந்து, தியாகராசர் சந்நிதியை அடைவோம். திருமால் தன் இதயத்துவைத்துப்பூசித்து இந்திரனுக்கு வழங்க, அவ்விந்திரனிடம் முசுகுந்தசோழன் பெற்றுவந்து தாபித்த நிறைசெல்வத் தியாகராஜர் இரத்தின சிங்காசனத்தில் இருபுற மும் இருவாட்படைகள் விளங்கிட செண்பகப்பூச்செண்டோடு அருளரசாய்க் கொலுவிருக்கும் அற்புதக் காட்சியைக் கண்டு தொழுவோம். அருகில் வீதிவிடங்கர் மரகதச்சிவலிங்கவடிவில் விளங்குகிறார். தியாகராஜர் அருகில் உமையம்மை விளங்கு கிறார். திருமுகமண்டலங்களைமட்டுமே அலங்காரத் திருவுருவில் நாம் காணலாம். மார்கழித் திருவாதிரையில் இடதுபாதத்தையும், பங்குனி உத்திரத்தில் வலது பாதத்தையும் தரிசிக்கலாம்.

தியாகராசர் பீடம் இரத்தின சிங்காதனம் எனவும் அசைந் தாட இடப்பெறும் தண்டு மாணிக்கத்தண்டு எனவும், கொடி தியாகக்கொடி எனவும், வாள் வீரகண்டயம் எனவும், நடனம்

அஜபாநடனம் எனவும் கூறப்படும். தியாகேசருக்கு வீதி விடங்கர், தியாகவிநோதர், செவ்வந்தித்தோடழகர், செங்கழுநீ ரழகர், ஆடரவக் கிண்கிணிக்காலர், தேவசிந்தாமணி முதலிய பல பெயர்கள் உள்ளன. இப்பெருமானை ஆராஅன்போடு திருமுறை ஆசிரியர்கள் போற்றிப் பாடியருளிய தோத்திரங்களை ஓதி வழிபட்டு, மீண்டும் தக்ஷிணாமூர்த்தியைத் தரிசித்து வலமாக வந்தால், மேலைப்பிராகாரத்தில்வாதாபிவிநாயகர், சகஸ்ரலிங்கம், விசுவநாதர், காட்சிகொடுத்தநாதர், பிக்ஷாடனர், முருகன், மகாலக்ஷ்மி, துர்க்கை, சரஸ்வதி, அன்னபூரணி முதலிய மூர்த்திகளைத் தரிசிக்கலாம்.

வடக்குப் பிராகாரத்தில் நவக்கிரகங்கள் வக்கிரமின்றி வரிசையாக விளங்குகின்றனர். ரணவிமோசனர், துர்க்கை, ஆதிசண்டர். எமசண்டர் சந்நிதிகள் உள்ளன. வடகீழ்க் கரையில் சந்திரசேகரரும், கீழைப்பிராகாரத்தின் வடபகுதியில் காலபைரவரும் உள்ளனர். இவர்களை வழிபட்டு அம்பிகை கோயிலை அடைவோம்.

### அல்லியங்கோதை :

அம்பிகைகோயில் முதற்கோபுரவாயிலில் தெற்குநோக்கி உள்ளது. அம்மையின் திருப்பெயர் அருள்மிகு அல்லியங் கோதை. வடமொழியில் நீலோத்பலாம்பாள் எனக் கூறுவர். இவ்வம்மையின் இடத்திருக்கை தோழியின் தோளில் விளங்கும் முருகன் திருக்கரத்தைப் பற்றிய நிலையில் விளங்குகிறது. அம்பாள்சந்நிதியில் பள்ளியறை உள்ளது. அழகிய சித்திரங் களோடு விளங்கும் இச்சந்நிதியை அடைந்து அருள்மிகு அல்லியங்கோதையை வழிபட்டு வழிபாட்டை நிறைவுசெய்து கொள்ளலாம்.

### மனுநீதிச்சோழன் தேர் :

திருக்கோயிலின் வடகிழக்குமூலையில் விட்ட வாயிலுக்கு அருகில் கன்றையிழந்த பசுவின் துயர்போக்க மனுநீதிச்சோழன் தன்மகனைத் தேர்காலில் இட்டுக் கொன்ற வரலாற்றுச் சிற்பம் விளங்குகிறது. மிகப்பழமையான கல்தேர், பசு, கன்று ஆகியன காணுதற்குரியவை.

### பரவையுண்மண்தளி :

இது. திருவாரூர்க் கீழவீதியில் பெருந்தேர்நிலைக்கு அருகில் உள்ளது. கிழக்குப்பார்த்த சந்நிதி (தளி - கோயில்). ஒரு காலத்தில் செங்கற்கோயிலாக இருந்ததால் மண்தளி எனப் பெற்றது. பரவை - கடல். இந்நகர்மீது வருணன் அனுப்பிய

கடலை இறைவன் சுவறச்செய்ததால் பரவையுண்மண்தளி எனப்பெற்றது. துருவாசமுனிவர் பூசித்த தலம். விநாயகர் சந்நிதியில் இவர் திருவுருவம் உள்ளது. சுந்தரர் திருவொற்றி யூரிலிருந்து திருவாரூர் வந்தபோது முதலில் மண்தளியீசரை வழிபட்டுக் கண்ணொளி வேண்டித் திருப்பதிகம் பாடியுள்ளார் என்பது இத்தலப் பதிகத்தின் ஏழாம் பாடலால் அறியலாம். பெரியபுராணத்திலும் இச்செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. இறைவன் திருப்பெயர் அருள்மிகு தூவாய்நாதர். பரவையுண் மண்தளியீசர் எனவும் வழங்கப்பெறுவர். இறைவர் திருவுருவம் மிக்க ஒளியுடையது. அம்பிகை அருள்மிகு பஞ்சின்மெல்லடி யம்மை. தீர்த்தம் கோயிலுக்குள் உள்ளது.

## மூர்த்திகள் :

இத்தலத்தில் உள்ள விநாயகர்களில் ஐங்கலக்காசு விநாயகரும், வாதாபி விநாயகரும், மூலதார கணபதியும் குறிப்பிடத் தக்க மூர்த்திகள் ஆவர். இறைவன் திருப்பெயர் அருள்மிகு வன்மீகநாதர். தமிழில் புற்றிடங்கொண்டார் என வழங்கப் பெறுகிறார். சிறப்பு மூர்த்தி அருள்மிகு தியாகராஜர். விடங்கர்: வீதிவிடங்கர். நடனம்: கமலநடனம். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு நீலோத்பலாம்பாள்.

தீர்த்தம் - கமலாலயமும், மற்றும் பல தீர்த்தங்களும் உள்ளன. தலமரம் - பாதிரி. வாத்தியம் : பஞ்சமுகவாத்தியம். பாரிநாயனம், சுத்தமத்தளம். தியாகப்பள்ளு தியாகக்குறவஞ்சி, விராணுக்கவிசயம் என்பன இத்தலத்தில் ஆடப்பெற்ற கூத்து வகைகள்.

## தேவாரத் திருப்பதிகங்கள் :

சீகாழிக்கு அடுத்தநிலையில் 34 திருப்பதிகங்களைக்கொண்ட தலம் திருவாரூர். திருஞானசம்பந்தர் ஐந்து திருப்பதிகங்களையும், திருநாவுக்கரசர் 21 திருப்பதிகங்களையும், சுந்தரர் எட்டுத் திருப் பதிகங்களையும் அருளியுள்ளனர். திருஞானசம்பந்தர் மூன்றாந் திருமுறையில் (3: 109) திருக்கயிலாயத்தையும், திருவானைக் காவையும், திருமயேந்திரத்தையும், திருவாரூரையும் இணைத்துத் திருப்பதிகம் பாடியுள்ளார். திருவாரூர் அரநெறிக்குத் திருநாவுக் கரசர் பாடிய இரண்டு திருப்பதிகங்களும், திருவாரூர்ப் பரவையுண்மண்டளிக்குச் சுந்தரர் அருளிய ஒரு திருப்பதிமும் உள்ளன.

மற்றும் பிற தலங்களோடு தேவாரத் திருமுறைகளில் திருவாரூர் இடம் பெற்றுள்ள பாடல்கள் உள்ளன. அவற்றின் எண்கள் வருமாறு :- முதல்எண் திருமுறை; இரண்டாவது எண் பதிகம் ; மூன்றாவது எண் பாடல்.

1-11-5, 1-52-4, 1-84-2, 2-39-1, 4-99-6, 5-65-5, 6-1-2, 6, 6-2-5, 9, 6-7-4, 6-12-4, 6-16-5, 6-17-4, 9, 6-21-8, 6-22-2, 6-23-6, 6-33; (திருவாரூர்மூலட்டானமும், அரநெறியும்) 6-41-8, 6-49-4, 6-51-3, 8, 6-58-5, 6-59-8, 6-69-7, 8, 6-70-2. 6-71-4, 6-76-5, 8, 6-78-7, 6-79-5, 6-81-2, 6-87-5, 6-99-6, 7-2-6, 7-5-9, 7-31-1, 7-32-8, 7-41-10, 7-46-2, 8, 7-47-4, 7-53-7, 7-60-4, 7-70-6, 7-86-10, 7-89-11, 7-9-10.

திருவாசகத்திலும் மற்றும் அனைத்துத் திருமுறைகளிலும் ஆரூர் இடம்பெற்றுள்ளது. திருமந்திரத்தில் ஊர்ப்பெயர் கூறப் படாவிடினும் தியாகேசர் திருநடனம் குறிக்கப்பட்டுள்ளது.

## அடியவர்களும் அன்பர்களும்

### திருஞானசம்பந்தர் :

தம் திருப்பதிகத்துள் ஆரூர்ப்பெருமைகளையும் இறைவன் பெருமைகளையும் அவரை வணங்குவார்பெறும் பயன்களையும் கூறுகிறார். நெஞ்சை விளித்து நிலையாமையை விளக்கி 'ஆரூர் தொழுது உய்யலாம் அஞ்சாதே' எனவும், தன்னை வரவேற்ற ஆரூர் அடியவர்களை நோக்கி 'என்னை ஆரூர் இறைவன் ஏன்றருளுவானோ' எனவும் திருப்பதிகங்களில் அருளிச்செய் துள்ளார்.

### திருநாவுக்கரசர் :

தம் திருப்பதிகத்துள், ஆரூர் அம்மான் பெருமைகளையும் அவ்விறைவனது ஆதிரை நாளின் சிறப்பையும் விரிவாக அருளுகிறார். அப்பெருமானை வணங்காது புறச்சமயம் சார்ந் திருந்த தம்நிலைக்கு இரங்குகிறார். ஆரூர் இறைவனைச் சிக்கெனப் பிடித்தேன விடேன் என்கிறார். பல சமயத்தவர்களும் ஆரூர்ப் பெருமான் அருட்காட்சியில் திளைப்பதை அருளுகிறார். தொண் டர்க்குத் தொண்டராம் பேறு வேண்டுகிறார். ஆரூர் அரனை அடைந்ததால் ஏற்பட்ட பெருமிதத்தோடு எம்மிடம் உமக்கு வேலையில்லைஎனஐம்பூதங்கள்,பொறிகள்,புண்ணியபாவங்கள், செல்வம், நல்குரவு முதலியனவற்றை விளித்துக் கூறுகிறார்.

தமிழர்ச்சனையாக நூற்றெட்டுப் போற்றிகளோடு ஒரு திருப் பதிகம் அருளிச்செய்துள்ளார். ஆரூர்க் கோயிலின் பழமையை விளக்கிப் பாடுகிறார்.

**சுந்தரர் :**

அவதரித்தபோதே பெற்றோர்களால் திருவாரூர்த் தொடர் போடு நம்பியாரூரர் எனத் திருப்பெயரிடப்பெற்றவர். தியா கேசப் பெருமானால் தம்பிரான் தோழர் என்னும்பெயர் சூட்டப் பெற்று ஆட்கொள்ளப் பெற்றவர். திருவாரூரில் திருத்தொண்டத் தொகை அருளுவதற்காகவே அவதரித்தவர். பரவையாரை மணந்து தம்வாழ்நாளிற் பெரும்பகுதியைத் திருவாரூரில் கழித் தவர். எங்குசென்றாலும் தியாகேசனை மறவாத சிந்தையாளர். இவர் அருளிய திருப்பதிகப்பாடல்கள் அகப்பொருளமைதி யோடு இறைவன்பால் தூதனுப்பும் முறையில் அமைந்தன. தியா கேசரது பிரிவாற்றாது இவர்பாடிய திருப்பதிகங்கள் மூன்றும் திருவாரூர் இறைவனிடம் இவருக்கு இருந்த ஈடுபாட்டை விளக்குவன. வலக்கண் தாராமைக்கு இறைவரைக் கடிந்து பாடும் பதிகம் இறைவர்பால் இவருக்கிருந்த மிக்க உரிமையை எடுத்துக்காட்டும்.

திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து கூடிப் பிரிந்த போது இரண்டுகண்களும் மறையவே, திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோலும், காஞ்சிபுரத்தில் இடக்கண்ணும் பெற்றுத் திருவாரூர் வந்தபோது வலக்கண் பெற்ற வரலாற்றைப் பெரிய புராணத்தில் விரிவாகக் காணலாம். இவர் தம்மோடு ஊடிய பரவையாரைச் சந்துசெய்விக்க இறைவரை வேண்ட, ஆரூர் இறைவனே பரவையார்பால் இருமுறை தூது சென்றார் என்ற வரலாறு பெருமான் இவர்மீதுகொண்டிருந்த எளிவந்த பெருங் கருணையைக் காட்டும். இதனால் இறைவர் நடந்துசென்ற திருவாரூர்த் திருவீதி திருவடிப்போது நாறும் திருவீதி எனப் பெற்றது. இறைவனைப் பணி கொண்டதற்காகச் சுந்தரர்பால் சினம் கொண்ட ஏயர்கோன் கலிக்காமரைச் சுந்தரரோடு தியா கேசர் நட்புக்கொள்ளச் செய்தருளினார். குண்டையூர்க்கிழார் தந்த நெல்மலையைத் திருவாரூரில் நிரப்பியபோது அவரவர் எல்லைக்கு உட்பட்ட நெல்லை அவரவரும் எடுத்துக்கொள்ள அருள்புரிந்தார்.

**பரவையார் :**

திருக்கயிலாயத்தில் அம்மையின் தோழியாயிருந்த கமலினி பதியிலார் குலத்தில் பரவையார்என்ற திருப்பெயரோடுதோன்றி

ஆரூர் இறைவனருளால் சுந்தரரை இவ்வூரில் மணந்து வாழ்ந்தார். சுந்தரர் சேரமான்பெருமாள் நாயனாரைப் பரவையார் மாளிகையில் வரவேற்று அவரை விருந்தினராக வைத்து உபசரித்தார்.

**நமிநந்தியடிகள் :**

அந்தணர் குலத்தில் ஏமப் பேரூரில் தோன்றிய இவர் அர நெறிநாதர்க்கு திருவிளக்கேற்றும் பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில் விளக்கெரிக்க நெய் கிடைக்காமல் ஒருவீட்டிற் சென்று நெய்கேட்க, அந்தவீட்டுச் சமணர் 'ஒளிக்கடவுளுக்கு விளக்கு ஏன்? வேண்டுமானால் தண்ணீரை ஊற்றி ஏற்றுவது தானே' என்றுகூறக்கேட்டு மனம்வருந்தியபோது, இறைவனது அருளுரையை அசரீரிவாயிலாய்க் கேட்டு நீரால் விளக்கெரித் தவர். இவர் மணலிக்குச் சுவாமி எழுந்தருளியபோது எல்லாச் சாதியினரும் பெருமானைச் சுமந்து சென்றதால் தீட்டுப்பட்டு விட்டதாகக் கருதியபோது, இறைவன் திருவாரூரில் பிறந் தவர்கள் அனைவருமே சிவகணநாதர்களாவர் என உணர்த்தப் பெற்றவர்.

**தண்டியடிகள் :**

இவர் பிறவியிலேயேகுருடர். ஐந்தெழுத்தை இடைவிடாது செபிப்பவர். சமணர்கள் கமலாலயத்தைப் பாழிகளும்வீடுகளும் கட்டித் தூர்த்தபோது குளத்துக்கும் கரைக்குமாகக் கயிறு கட்டிக்கொண்டு குளம் வெட்டியவர். இறைவன் ஆணையால் சோழமன்னனும் இவருக்குத்துணையானான். தியாகேசன் திருவரு ளால் கண்ணொளி பெற்றுச் சிவபதம் எய்தியவர்.

**கழற்சிங்கர், செருத்துணையார் :**

காடவர்குலவேந்தர் மனைவியோடு பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருவாரூரை அடைந்தபோது அவர்தம் மனைவியார் அரநெறிக் கோயிலில் திருப்பள்ளித்தாம மண்டபத்தில் சிந்திக்கிடந்த புதுமலர் ஒன்றை எடுத்துமுகர்ந் தார். அதைக்கண்ட பூத்தொண்டராகிய செருத்துணையார் சினந்து வாளால் அவர்தம் மூக்கைஅரிந்தார். அதைஅறிந்த கழற்சிங்கர் இக்குற்றத்தைச் செய்ததற்கு மூக்கைமட்டும் அரிந்தால்போதாது; அதைஎடுத்த கையையும் தடியவேண்டும் என்று அவர் தம்மனைவியின்கையைத் தடிந்தார். தொண்டுநெறி யிலும் பக்தி உணர்விலும் சிறந்துநின்ற இவ்விரு நாயன்மார் களின் பக்தி வெளிப்பாடு இத்தலத்தில் நிகழ்ந்தது.

**விறன்மிண்டர் :**

மலைநாட்டுச் செங்குன்றூரைச் சேர்ந்தவர். சிவனடியார்களைச் சிவபிரானகவே தொழும் இயல்பினர். திருவாரூரில் இவர் வாழ்ந்துவரும் நாளில் ஒருநாள் சுந்தரர் தேவாசிரயமண்டபத்தில் கூடி இருந்த அடியார்களை வணங்காமல் செல்வதை அறிந்து 'சுந்தரரும்புறகு; அவரைஆட்கொண்ட சிவனும்புறகு' என்று சினந்தார். இதனை அறிந்த சுந்தரர் தியாகப் பெருமான் அடியெடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டத் தொகை பாடி அடியார்களை வணங்கி மகிழ்ந்தார்.

இத்தலத்தில் அருளாளர்கள் பலரும் வாழ்ந்துள்ளனர். சிவபுரம் தத்துவப்பிரகாசரிடம் அருள்பெற்ற செட்டித்தெரு ஞானப்பிரகாசர் இத்தலத்தில் வாழ்ந்தவர். இவர் பழுதைகட்டி ஞானப்பிரகாசர் எனவும் வழங்கப்பெறுவார். இவரிடம் உபதேசம் பெற்ற கமலை ஞானப்பிரகாசரும் இத்தலத்திலேயே வாழ்ந்தவர். தியாகப்பள்ளு தியாகக்குறவஞ்சி என்பன இவர் இத்தலத் தொடர்பாக அருளிய நூல்கள். கமலை ஞானப்பிரகாசரிடம் உபதேசம் பெற்ற தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பல நாட்கள் இத்தலத்தில் தங்கியுள்ளார்கள்.

**சேக்கிழார் :**

திருத்தொண்டர் புராணம் அருளிய சேக்கிழார் மலைக்குத் திருக்கயிலையையும், நாட்டுக்குச் சோழநாட்டையும், நகருக்குத் திருவாரூரையும் எடுத்துக்கொண்டு இத்தலத்தைப் போற்றிப் பாடியுள்ளார். திருவாரூர் நிலமகட்கு இதயகமலமும் திலகமும் போல்வது எனவும், திருமகள் வழிபட்டது எனவும், திருவாரூர் மருங்கில் தேவாரத்திருப்பதிகங்களைக் கிளிகள்பாடப் பூவைகள் கேட்கும் எனவும், திருவாரூரில் பிறந்தவர் சிவகணத்தவர் எனவும் இவ்வூரையும் மக்களையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

கி. பி. 16 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த சம்பந்தமுனிவர் இத்தலத்திற்குத் தலபுராணம் இயற்றியுள்ளார். சிதம்பரம் மறைஞானசம்பந்தரும் கமலாலயச்சிறப்பு என்னும் நூலை இயற்றியுள்ளார். குமரகுருபரர் திருவாரூர் நான்மணிமாலை பாடியுள்ளார். அந்தகக்கவி வீரராகவமுதலியார் திருவாரூர் உலா முதலிய நூல்களை எழுதியுள்ளார். மற்றும் வைத்தியநாதநாவலர், எல்லப்பநாவலர், தியாகராஜச்செட்டியார், சிதம்பர

முனிவர் முதலியோரும் இத்தலத்தைப் பற்றி நூல்கள் பல வற்றைப் பாடியுள்ளனர். தருமையாதீனம் பத்தாவது மகா சந்நிதானம் ஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் அசபா நடனத்தைப் போற்றிப் பாடிய பதிகம் ஒன்றுண்டு. திருவாரூரைப் பற்றிய 32 நூல்கள் தமிழில் உள்ளன. வடமொழியில் அஜபாரகசியம் முதலான 18 நூல்கள் உள்ளன.

**சூழ உள்ள தலங்கள் :**

திருப்பள்ளியின் முக்கூடல், பரவையுண்மண்டளி, திரு விளமர் முதலிய தேவாரம் பெற்ற தலங்கள் இத்தலத்தைச்சூழ உள்ளன. நமிநந்தி அடிகள் திருவிளக்கேற்ற நெய் வாங்கிய தலம் திருநெய்ப்பேறுஎனவும், இறைவன் மணவாள கோலத்தில் எழுந்தருளிய இடம் திருமுப்பத்துஎனவும் வழங்கப்படுகின்றன. மற்றும் வண்டாம் பாலை, புலிவலம், அம்மையப்பன், தண்டலை, தியாகபுரம் முதலிய பல இடங்களும் இத்தலத்தோடு தொடர் புடையனவாக உள்ளன.

## புராணவரலாறுகள்

**வன்மீகநாதர் :**

திருமால், இந்திரன் முதலிய தேவர்கள் அனைவரும் கூடிக் குருக்ஷேத்திரத்தில் யாகம் செய்தனர். இந்த யாகத்தை தொடக்கமுதல் இறுதிவரை செய்துமுடிப்பவரே உயர்ந்தவர் என்று சபதம்செய்துகொண்டனர். திருமால் வென்றார். அதனால் செருக்குற்றார். அதை அடக்க இறைவனருளால் ஓமகுண்டத் தில் ஒரு வில்தோன்றியது. அதனை எடுத்துத் தேவர்களை அடக்கி ஆள முற்பட்டார். இத்தலத்தை அடைந்தார். வலியொடுங்கி வில்லை ஊன்றி அதன்முனையில் தலை சாய்த்துநின்றார். தேவர்கள் செல்லுருவாகி நாணை அரித்து அறுத்தனர். நாணறுந்து திருமா லின் தலை தெரித்தது. தேவர்கள் திருமாலை எழுப்பித்தருமாறு இறைவனை வேண்டினர். இறைவன் புற்றிலிருந்து வெளிப்பட்டு, தெறித்துவிழுந்த திருமாலின்தலையை அவருடலோடு ஒட்டச் செய்து உயிர்ப்பித்தருளினார்.

**கமலாலயம் :**

திருமகள் கடலரசனுசிய வருணனிடம் வளர்ந்துவந்தாள். மதுகைடபர்களைத் திருமால் வென்ற வரலாற்றைக் கேட்டு அவரை மணந்துகொள்ளவேண்டி இத்தலத்தை அடைந்து வன்மீகநாதரை வழிபட்டாள். இறைவன்காட்சிதந்து திருமகள் வேண்டியவாறே வரமளித்தருளினார். திருமகள் தன்பெயரால்

இத்தலம் வழங்கவேண்டும் என்று வேண்டினாள், அதுமுதல் இத்தலம் கமலாலயம் என வழங்கப்பெறுகிறது.

திலீபன், தசரதன், சித்தீசன், குலீசன். இராமன். லவகுசர் முதலியோர்களும் வழிபட்டு வரம்பல பெற்றுள்ளனர்.

**தியாகேசர் :**

திருமால் தான் ஒரு புதல்வனைப் பெறவிரும்பி இறைவனை வழிபட்டார். இறைவன் அம்மையோடு அருட்காட்சியளித்து வரமருளினான். அம்மையோ திருமால் தன்னை வழிபடாததால் பிறந்த புதல்வன் விதிவலியால் அழிவான் என்று கூறவே, திருமால் சிவபெருமானையும் குமாரக்கடவுளையும் உமையம்மை யையும் ஒரே ஆசனத்தில் இருத்தி வழிபட்டுப் பிழைபொறுக்க வேண்டினார். மகிழ்ந்தமகேசுவரி இறந்தமகன்பிழைப்பான்என்று அருளினார். உடனே திருமால் இப்போது நான் வழிபடும்நிலையில் எக்காலத்தும் சோமாஸ்கந்தராய்விளங்கித் தனக்கு அருள்புரிய வேண்டினார். அவ்வாறே இறைவனும் திருவருள்பாலித்தனன். திருமால் அம்மூர்த்தியைத் தன் நெஞ்சக்கோயிலில் நிலைநிறுத்தி வழிபட்டார். பெருமானும் திருமாலின் மனக்கோயிலில் உச்சு வாச நிச்சுவாசத்தால் அசைந்தாடி மகிழ்ந்திருந்தார். இதனை அப்பரடிகளும் 'பையஞ்சுடர்விடு நாகப் பள்ளி கொள்வான் உள்ளத்தான்' என்று அருளினார்.

அப்போது அசுரர்களால்துன்புற்ற தேவேந்திரன் திருமாலை அடைந்து தன் துன்பம் அகல வழியருளுமாறு வேண்டினான். திருமால் இந்திரன்மேல் கருணைகொண்டு தனது பூஜாமூர்த்தி யாக விளங்கிய தியாகராஜாவை அவனிடம் தந்து அன்போடு அவரைப் பூசித்தால் துன்பங்கள் நீங்கும் என்று கூறினார். அவ் வண்ணமே தியாகராஜமூர்த்தியைப் பெற்று வழிபாடுசெய்த இந்திரன் அசுரர்துன்பம் அகலப்பெற்றான்.

திருவாரூர் செய்த பெருந்தவத்தால் பிறிதொருமுறை வலன் என்னும் அசுரன் இந்திரனோடு போரிடவந்தான். இந்திரன் நில உலகில் அரசாண்டுவந்த முசுகுந்தசோழனைப் படைத்துணைக்கு அழைத்தான். இச்சோழமன்னன் முற்பிறவியில் திருக்கயிலாயத் தில் ஒரு பூஞ்சோலையில் குரங்காக இருந்து வில்வ இலைகளைச் சிவபெருமான்மீது பறித்து எறிந்து, அப்பயனால் உலகாளும் பேறுபெற்றவன். முற்பிறப்பில் தான் குரங்காக இருந்தமையும் அருச்சனைப்பயனால் அரசனாக விளங்குவதையும் உலகோர்க்கு அறிவிக்க, குரங்குமுகமுடையவனாகத் திகழ்ந்தான். முசுகுந்தன்

துணைவலியாலும் இறையருள் வலியாலும் வலனை வெற்றி கண்ட இந்திரன் முசுகுந்தனைப் பாராட்டிப் பரிசளிக்க விரும்பினன். என்னிடம் வேண்டுவது உண்டாயின் கேள் தருகிறேன் என்று நட்புரிமையோடு கூறினன்.

முசுகுந்தன் இந்திரன்வழிபடும் தியாகவிநோதரைத்தருமாறு கேட்டலும், இந்திரன் அவரைக் கொடுக்க மனமில்லாமலும், சொன்ன சொல்லைத் தட்டமுடியாமலும் தியாகேசர்போல ஆறு திருவுருவங்களைச் செய்து உடன்வைத்து ஒன்றை எடுத்துக் கொள்ளலாம் என்றனன். தியாகேசர் முசுகுந்தனுடைய அன்பிற்கிரங்கியவராய்த் தம் உண்மையுருவைக் காட்டிநிற்க, முசுகுந்தன் அவரையே சுட்டிக்காட்டித் தருமாறு வேண்ட, இந்திரன் செய்வதறியாது தான் வழிபட்ட கடவுளோடு ஏனையோரையும் அளித்து எடுத்துச்செல்லுமாறு பணித்தான்.

முசுகுந்தன், பெற்ற ஏழு தியாகேசர்களையும் நிலவுலகிற்குக் கொண்டுவந்து இந்திரன் வழிபட்ட கடவுளை வன்மீகநாதர் கோயிலுக்கு அருகில் அதனேடிணைந்ததாய்த் தனிக்கோயில் அமைத்து எழுந்தருளச்செய்தும், ஏனைய ஆறு திருவுருவங்களையும் ஆறு தலங்களிலும் எழுந்தருளச்செய்தும் வழிபட்டான். சிறப்பு விழாக்கள் நிகழ்த்தினன். முசுகுந்தன் தியாகேசர்க்கு மலர்தூவிச் செய்வித்த அருச்சனை முசுகுந்தார்ச்சனை என்ற பெயரோடு வழங்கப்பெற்று அன்பர்கள் பலராலும் செய்யப் பெற்றுவருகிறது. இவ்வாறுமுசுகுந்தன்அமைத்த ஏழுதியாகேசர் எழுந்தருளிய தலங்களும் சப்தவிடங்கத் தலங்கள் எனப் போற்றப்பெறுகின்றன. அவைகளை அறிவிக்கும் பாடல் :

சீரார் திருவாரூர் தென்னுகை நள்ளாறு
காரார் மறைக்காடு காருயல் — பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

ஆரூர்த் தியாகேசர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஆன்மார்த்த நாயகராய் விளங்கியதை அவரது திருமொழிகளால் அறியலாம். சோமாசிமாற நாயனர் தான் செய்த யாகத்துக்கு எழுந்தருளவேண்டுமென்று சுந்தரர்மூலம் வேண்ட, அவரது வேண்டுகோளை ஏற்றுப் பெருமான் புலையர் வேடத்தோடு சென்று அவிர்ப்பாகம் ஏற்றருளினர் என்று கூறப்படுகிறது. அம்பர்மாகாளத் திருக்கோயிலிலும் தியாகேசர் காட்சிதருகிருர்.

மனுநீதிச் சோழனின் பேரன்புக்கு உரியவராய் விளங்கிய இம்மூர்த்தி, அம்மன்னன் பசுவின் துயர்போக்கி நீதிகாக்கத் தன் மகனைத் தேர்க்காலில் இட்டபோது விடைமீது தோன்றி அருட்காட்சி நல்கியதைப் பெரியபுராணம் காட்டுகிறது.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைபொழிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்.

என்பது பெரியபுராணம். பங்குனி உத்திரவிழாவில் இவர் ஆழித் தேரில் எழுந்தருளி உலாவருவது உலகம் நன்கறிந்ததே.

தியாகேசர்க்குரிய பொருள்களுக்குத் தனித்தனிப் பெயர் கள் உள்ளன. ஆடுதண்டு – மாணிக்கத்தண்டு, கொடி – தியாகக் கொடி, ஆசனம் – இரத்தினசிம்மாசனம், மாலை – செங்கழுநீர் மாலை, வாள் – வீரகண்டயம், நடனம் – அஜபா நடனம். யானை – ஐராவணம். மலை – அரதனசிருங்கம், முரசு – பஞ்சமுகவாத்தி யம், குதிரை – வேதம். நாடு – சோழநாடு, ஊர் – திருவாரூர், ஆறு – காவிரி, பண் – பதினெண்வகைப்பண்கள்என்பனவாம்.

இக்கோயிலில்ஆறுகால பூசைகள்நிகழ்கின்றன. பெருவிழா பங்குனியில் நிகழும். மற்றும் அவ்வப்போது சிறப்புநாட்களி லும் விழாக்கள் நிகழ்கின்றன.

## இராஜாங்கக்கட்டளை :

இக்கோயிலின் கைங்கரியங்களுக்கு உதவப் பதின்மூன்று கட்டளைகள் உள்ளன. அவற்றுள் இராஜாங்கக் கட்டளை தருமையாதீன அருளாட்சியில் உள்ளது. கட்டளைத் தம்பிரான் சுவாமிகளாக விளங்கிய பலரும் இத்திருக்கோயில் திருப் பணிகளுக்கும், கட்டளையின் வருவாய்ப்பெருக்கிற்கும் அருந் தொண்டாற்றியுள்ளனர்.

தருமையாதீனம் 17 ஆவது மகாசந்நிதானம் அவர்கள் அரு ளாட்சிக் காலத்தில் இராஜாங்கக் கட்டளையை மேற்பார்த்த ஸ்ரீ அருணசலத் தம்பிரான் சுவாமிகள் இக்கோயிலின் தெற்குக் கோபுரத்தைத் திருப்பணி செய்துள்ளார்கள். இதனை விளக்கும் கல்வெட்டு, கோபுரவாயிலில் உள்ளது. ஸ்ரீ பழனியப்பத் தம்பிரான் சுவாமிகள், கட்டளைக் களஞ்சியத்தைக் கட்டி யுள்ளார்கள். இராஜாங்கக்கட்டளை, திட்டமிட்டபடி திருக் கோயில்பணிகளுக்கு உதவிவருகிறது.

கட்டுரை எண். 18.

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M. A., B. Lit., D. P. P. A., D. U. N. I. U.

**கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்**
**ஒளியே! ஒளிரும் ஒளிக்கு இடமே! எண்ணில் ஒன்றுமில்லா**
**வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!**
**அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே! (16)**

## அ. கிளியே!

(1) அழகு, கொஞ்சிப் பேசுதல் முதலிய இயல்புகள் நோக்கி அன்னையினைக் கிளியாக உருவகிக்கிறார்.

(2) "மயிலே! மடப்பிடியே! கொடியே! இளமான்
குயிலே! பசுங்கிளியே! அன்னமே! [பிணையே!

என்ற சரசுவதியந்தாதிப் பாடலில் கம்பன் கலைமகளையும் பசுங்கிளி என்கிறான்.

(3) "தாங்கி உலகில் தரித்த பராபரன்
ஓங்கிய காலத் தொருவன் உலப்பிலி,
பூங்கிளி, தங்கும் புரிகுழலா ளன்று
பாங்குடன் ஏற்பப் பராசக்தி போற்றே"

எனவரும் திருமந்திரத்திலும் "பூங்கிளி" எனத் திருமூலர் குறிப்பிடுகிறார்.

(4) "பூமன் அறியாப் பிரணவத்தின் பொருளைப் பகரும் பூங்கிளியே!" எனத் திருப்போரூர் சந்நிதிமுறையில் முருகப் பெருமானையும் "பூங்கிளியே!" என அழைக்கக் காண்கிறோம்.

(5) அடியார்களின் இதயமாகிய கூட்டில் வாழ்வதால் அவள் கிளி எனப்பட்டாள். ஆனால் அன்னையென்னும் கிளிவாழும் வேறு கூண்டுகளும் உண்டு எனச் சான்றோர் காட்டுகின்றனர்.

(5. A) "ஹ்ரீம்கார பஞ்ஜர சுகி" – "ஹ்ரீங்காரமென்னும் மந்திரக்கூட்டில் வாழும் கிளி" என லலிதாத்ரிசதி வருணிக்கிறது.

(B) ஆதிசங்கரரின் சியாமளா நவரத்தின மாலை "ஓங்கார பஞ்ஜர சுகி – ஓங்காரமென்னும் கூட்டில் வாழும் கிளி" எனக் காட்டுகிறது.

(C) சங்கீத மூர்த்தி முத்துசுவாமி தீட்சிதர் தனது கமலாம்பா நவாவரண க்ருதியில் "தாரபஞ்ஜர சுகி – தாரமென்னும் பிரணவக்கூட்டில் வாழும் கிளி "எனப்போற்றிப் புகழ்கிறுர்.

(6) கிளி சிவசக்தி ஐக்யத்தைத் தன்வடிவால் நினைவூட்டும் பறவையாகும். இறைவன் நிறம் சிகப்பு. அன்னை நிறம் பச்சை. இவ்விரு நிறங்களும் இணைந்து விளங்கும். கிளி சிவசக்தி சம்மேளன வடிவாகும்.

(7) கிளி ஆலமரத்தில் ஒன்றிப் பொருந்துகிறது. ஆலின் பழம் சிகப்பு. இலை பச்சை. அத்துடன் கிளியின் கால்கள் ஆலமரத்தின் பட்டையின் நிறம் பெற்றிருக்கின்றன. அவ்வாறே வேதங்கள் என்ற பதிகொண்ட வேருடன் கூடிய மரத்தில் அம்பிகை ஒன்றிப் பொருந்துகிருள்.

(8) வானில் தன்னிச்சைப்படி பறந்து திரியும் இயல்புடைய கிளி கூட்டிலும் வாழ்கிறது. வீட்டிலும் விளையாடிக் கலந்து பழகுகிறது. அவ்வாறே யாவற்றுக்கும் அப்பாற்பட்ட சுதந்திர நிலையில் உள்ள அன்னை இறங்கிவந்து இதயக் கூண்டில் உறைவதுடன் அடியார்களுடன் விளையாடிக் களிக்கும் எளி வந்த தன்மை அல்லது "சௌலப்யம்" கொண்டு விளங்குகிருள்.

(9) தூதாக அனுப்ப ஏற்றவைகளில் கிளியும் ஒன்று. அம்பிகைக்குச் சகஸ்ரநாமத்தில் 'சிவதூதி' என ஒரு பெயரும் உண்டு. இறைவன் என்னும் தலைவனிடம் அடியார் என்னும் தலைவியின் நிலையினை எடுத்தியம்பும் தூதாகவும் அவள் சொல்லப்படுகிருள்.

(10) உள்ளதை உள்ளபடி அப்படியே பேசுவது அல்லது சொன்னதைச் சொல்வது என்பது கிளியின் இயல்பு. கூட்டிக் குறைத்து எதனையும் அது பேசாது. அவ்வாறே அம்பிகை அடியவர்கட்கு மெய்ப்பொருளான "தன்னை உள்ளவண்ணம் காட்டியவா" என்பார் அபிராமிபட்டரே.

(10. A) மற்றும் மெய்ப்பொருளை அறிவார், அதனை உபதேசிக்கும் பொழுது இறைவடிவேயாகி, கூட்டாது – குறைக்காது – மாற்றாது உள்ளபடியே கூறுவர். புராணங்களை முனிவர்களுக்கு உபதேசிக்கும் "சுகாச்சாரியார்" என்பவர் கிளிமுகமுடையவர் எனக் கூறுவதன் உட்கருத்தும் அதுவே. (சுகம் என்றால் கிளி).

(10. B) அநுபூதிபாடிய அருணகிரியார் முருகப்பெருமான் தோள்மீது கிளியின் வடிவில் அமர்ந்தே பாடினார் என்பது வரலாறு.

(11) எல்லாவற்றுக்கும் மேலாக, பெரும் புலவர்களின் பேச்செல்லாம் அவர்களின் பேச்சன்று என்றும், அம்பிகை அவர்களின் இடது தோளில் கிளியின் வடிவில் அமர்ந்து பேசும் மொழியே அவர்களது பொன்மொழிகள் என்பதும் சாக்தர்களின் கருத்து.

11. (A) லலிதா சகஸ்ர நாமத்துக்கு உரை எழுதிய பாஸ்கர ராயர் அறியாதன எதுவும் இல்லை என்ற அளவிற்கு மாபெரும் புலமை பெற்ற உரையாசிரியர், கவிஞர், உபாஸகர்.

அவர் காசிமாநகரில் இருந்தபொழுது அங்குக் கூடியிருந்த பெரும் புலவர்கள் பலரும் அவரிடம் வாதிட்டும் ஐயம் தீர்ந்தும் அறிவொளி பெற்றனர். பல்கலைப் பண்டிதர்கள் பலரும் கேட்ட கேள்விக்களுக்கெல்லாம் பாஸ்கரராயர் தனி ஒருவராகவே நின்று அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கங்கள் கூறுவார்.

"ஒரே நேரத்தில் அவ்வாறு பல புலவர்களின் ஐயந்தீர்த்து அறிவொளி புகட்டும் பேச்சாற்றலை நீங்கள் எங்ஙனம் பெற்றீர்கள்?" என அப்புலவர்கள் வினவினர்.

"பேசுவது நானல்ல! பரிமளயாமளைப்பைங்கிளியே எனது தோளில் அமர்ந்து பேசுகிறாள்" என்றார் பாஸ்கரராயர்.

"அதனை நாங்கள் காண இயலுமோ?" என்றனர் புலவர் பெருமக்கள்.

உடனே அன்னைக்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தைத் தனது 'கெண்டி' யிலிருந்து எடுத்து, புலவர் பெருமக்களின் கண்களில் தடவினார் பாஸ்கரராயர்.

என்ன விந்தை? பேராயிரத்துக்கும் நூருயிரம் விளக்கங்கள் கூறிய நுண்ணறிவாளர் பாஸ்கரராயரின் இடத்தோளில் பசுங் கிளி ஒன்று அமர்ந்திருக்கக் கண்டனர் புலவர்கள்.

அமாவாசையினைப் பௌர்ணமி என்று அபிராமி பட்டர் கூறியதும் அவரது சொல்லன்று; அறிஞர்களின் தோள்மீது இருந்து கிளிவடிவில்பேசும் அம்பிகையின் சொல்லேயன்ருே?

## ஆ. கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும் ஒளியே!

(1) உனது உறவினர்களாகிய அடியார்களின் மனத்தில் உள்ளுணர்வாய்க் கிடந்து பின் ஞானவொளியாய்ப் பிரகாசிப் பவள் அன்னை.

(2) 'கிளைஞர்' என்ற சொல் 'உறவினர்' என நேரிடை யான பொருள்தரும். மரம் பல கிளைகளாகப் பிரிதல்போலத் தனிமனிதன் தம்பதியாகி, குடும்ப மாகி – குலமாகி – விரிகிருன். எனவே உறவினர்களைக் 'கிளைஞர்' என்ற சொல்லால் குறித்தனர். இங்கு அடியார்களையே தனது உறவினர்களாகக் கருதி அன்பு செலுத்திப் பேணிப் பாதுகாக்கிருள் அன்னை என்பது தோன்ற 'கிளைஞர்' என்ருர். மற்றும் மரத்தின் இயல்பு கள் அதன்கிளைகளுக்கு இருப்பதுபோல, அவள் அடியார்கள் அவளது இயல்புகளைப் பெற்று அவளாகவே மாறுகின்றனர்.

(3) அடியார் மனத்தில் முதலில் உள்ளுணர்வாய்க்கிடந்து, பின் மேன்மேலும் எழுந்து ஞானவொளியாகக் காட்சிதருகிருள்.

(4) குண்டலினி யோகிகளுக்குச் சிறிதுசிறிதாக பலவகை ஒலிகளும் ஒளிகளும் புலனுகும். அவற்றினை மீண்டும் முழுமை யாகக் காண முயன்று யோகம் புரிந்து பின்னர் அவளை ஒளி மயமாகக் காண்கின்றனர். மூலாதாரத்தில் உறங்கிக் கிடந்து செயலற்றிருக்கும் சக்தியினை மேலே எழுப்பிஎழுப்பி இறுதியில் சகஸ்ர கமலத்தில் தரிசனம் காண்கின்றனர்

## இ. ஒளிரும் ஒளிக்கு இடமே!

(1) அவ்வாறு ஒளிரும் ஞானவொளிக்கு மூலாதார இடமாக இருப்பவள்.

(2) சந்திரன், சூரியன், அக்கினி போன்ற சுடர்தரும் அனைத்து ஒளிகளுக்கும் மூலஇடமாய் இருந்து ஒளியூட்டுபவள் அல்லது சந்திர சூரியர்களாகிய ஒளிவட்டங்களுக்குத் தனது

தாடங்கத்தில் இடம் அளித்து, அக்கினி கண்ணாக ஒளிர நெற்றியில் இடம் அளித்தவள். சந்திர சூரியர்களைத் தனது மார்பகங்களாகக் கொண்டு அவற்றினுக்கு இடம் அளித்தவள் என்ற கருத்தும் உண்டு.

## ஈ. எண்ணில் ஒன்றுமில்லா வெளியே!

(1) ஆராய்ந்து பார்த்தால் எதுவும் இல்லாத வெளியாக இருப்பவள்.

(2) ஒன்றுமில்லா வெளி என்பது 'பாழ்' அல்லது 'சூன்யம்' என்ற நிலையினைக் குறிக்கும். இரண்டாவதாக வரும் வெளி ஆகாயத்தைக் குறிக்கும்.

(3) "விண்ணாதி பூதமெல்லாம் தன்னகத்தில் அடக்கிவெறு
வெளியாய் ஞானக்
கண்ணாரக் கண்ட அன்பர் கண்ணூடே
ஆனந்தக் கடலாய்"

என்ற தாயுமானவர்பாடலில் விண்ணையும் தன்னுள் அடக்கும் 'வெறுவெளி' குறிப்பிடப்படுதல் காண்க.

(4) பாஸ்கரராயர் எழுதிய 'வரிவஸ்யா ரகசியம்' என்ற நூலில் இதனைக் குறிப்பிடுகிறார்.

"உன்மன்யாம் நிருபம் ஷஷ்டம் சிந்த்யம் மஹா சூன்யம்"

இதன்பொருள் :- உன்மனியில் உருவமற்ற அளவதான பெரிய சூன்யம் சிந்திக்கட படவேண்டும். உரையாசிரியர் திரு. அண்ணா சுப்ரமணிய ஐயர் அவர்கள் அதனைக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

"துரியாதீதத்துக்குமேல் உன்மனி ஸ்தானத்தில் விளங்கும் மஹாசூன்யத்தில் எந்த வகையான விருத்தியும் (செயலும்) கிடையாது. துரியத்தில் அறிவு வடிவ விருத்தியுண்டு; துரியாதீதத்தில் பரிபூரண ஆனந்தகன அகண்டாகார விருத்தியுண்டு. மஹாசூன்யம் அகண்டாகார விருத்தியும் ஒழிந்த ஸகஜநிலை"

அதாவது அன்னையின் தன்மையினைத் தத்துவரீதியாகவும், வரிவசியா ரகசியம் போன்ற மந்திர சாஸ்த்திர ரீதியாகவும் எண்ணிப் பார்த்தால் அவள் ஒன்றுமில்லா வெளியாக இருக்கிறாள் என்பது திரண்டகருத்து.

## உ. வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!

(1) வான் முதலான ஐம்பெரும் பூதங்களாக விரிந்தவளும் அவளே.

(2) "வியத் ஆதி ஜகத் ப்ரஸூ:" – ஆகாயம் முதலான உலகினை வெளிப்படுத்தியவள் எனச் சகஸ்ரநாமம் கூறும் கருத்து முன்னரே எடுத்துக்காட்டப்பட்டது.

(3) தானே பூதங்களாக விரிந்தாள். அவற்றினைப் பெற்றுக் காப்பதால் தாயாக விளங்குகிறாள். எனவே 'அம்மே!' என அழைக்கிறார்.

(4) தோன்றும்போது ஆகாயம், முதலாகத் தோன்றுகிறது. மறையும்பொழுது அதுவே இறுதியாக மறைகிறது. இக் கருத்துத் தோன்ற 'வெளிமுதல் பூதம்' என்றும், வானந்தமான வடிவு எனவும் வேறுபடுத்திக் கூறிய சிறப்பினை உரையாசிரியர் திரு. கி. வா. ஜ. எடுத்துக்காட்டுகிறார்.

## ஊ. அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே!

(1) இரக்கத்துக்குரிய எளியேனது சிற்றறிவிற்கு எட்டும் அளவாய் நின்றது வியப்பானதாகும்.

(2) துரியாதீதமும் கடந்த மஹாசூன்ய நிலையில் இருப்பவளும் அனைத்துலகுமாய் விரிந்தவளும் ஆகிய நீ என் சிற்றறிவிற்கு எட்டும் அளவுக்கு இரங்கிவந்து அருள்செய்தது நான் இரக்கத்துக்கு உரியவன் என்பதாலல்லவா? என்னும் வினாத் தோன்ற 'அளியேன் – இரக்கத்துக்குரியவன்' என்கிறார்.

(3) நமது அறிவுக்கு ஆதாரமான நமது மூளையின் அளவோ நமது கைப்பிடியின் அளவினதே; அச்சிறிய மூளையின் அறிவாற்றலோ ஆளுக்கு ஆள் மாறுபடுகிறது. தத்துவ ரூபமாயும் மந்திரவடிவாயும் அண்டத்தின் வடிவாயும் இருக்கும் உன்னை எனது சிற்றறிவுகொண்டு அறிந்தது... அல்ல... அல்ல ...நீ எனது அறிவளவிற்கு அளவாக்கிக்கொண்டது அதிசயந் தான்.

(4) "பாதி மாதொடும் கூடிய பரம்பரன்
நிரந்தரமாய் நின்ற
ஆதி ஆண்டு தன் அடியாரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே"

என மணிவாசகர், பரம்பரன் - நிரந்தரமாய் நின்றஆதி தனக்கு அருள்செய்த கருணையினை எண்ணி அதிசயிக்கிறார்.

(5) பாவநாசம் உலகம்மையின் அருட்காட்சி கண்ட சிங்கை நமச்சிவாயப் புலவர் இதே அதிசயத்தைப் புலப் படுத்துகிறார்.

மண் கொள்ளுமோ! அந்தவிண் கொள்ளுமோ!
நின் மகிழ்நர் மனத்து
எண் கொள்ளுமோ! இஃது ஏதோ அதிசயம்!
எண்ணி எண்ணி
புண்கொள்ளுமோர் புன்மதியேனும் காண
இப்போது இரண்டு
கண் கொள்ளுமோ! உலகே இன்று நீ
நின்ற கட்டழகே!

— உலகம்மை கலித்துறையந்தாதி

அம்பிகையினைப் பசுங்கிளியாகப் பாவித்த இப்பாடலைப் பாராயணம் செய்வோர் பேச்சாற்றல் பெற்று முடிவில் பேசா அநுபூதியும் பெறுவர்.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Devasthanam Thiruvaiyaru.

My wife and I had the good fortune of visiting this ancient and famous Temple today. Thanks to the Temple authorities and the Revenue authorities. We had a lovely darshan of Lord Panchanadeeswarar and Godess Dhamsa varthani. I must congratulate the temple authorities for maintaining this historic temple so well.

(S-d) S. Mahadevan,
Major General,
Chairman,
Tamil Nadu Public Service,
Commission. Madras - 2.

8—6—81.

உ

# எதிர்காலம்

★


**ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்**

**ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.**


( துன்மதிஸ்ரீ ஆடிமீ 1௳ முதல் 32௳ முடிய

( 16—7—81 முதல் 16—8—81 முடிய )

| | | | |
|---|---|---|---|
| | | | பு. செ |
| | இராசி | | சூ ரா சு |
| கே | | | |
| சந் | ல/ | | கு சனி |

| | | | |
|---|---|---|---|
| பு கே சனி | கு | | |
| சு | அம்ஸம் | | சூ |
| ல/ | | | |
| | செ | சந். | ரா |

ஸ்ரீ துன்மதி ஸ்ரீ ஆடி மீ 1 ௳ குருவாரம் பூராட நக்ஷத்திரம் பத்திரை கரணம் கூடியகாலத்தில் சூரிய உதயம் முதல் 24 நாழிகை 23 விநாடிக்கு விருச்சிக லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மிதுனராசியிலிருந்து கடகராசி சங்கிரமணமாக ஆடி மாதப்பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று தட்சிணாயன புண்ணிய காலமாகும். சஸ்யாதிபதி குருபகவான் ஆகிறார். சங்கிரமகால கிரகஸ்திதியின் பலனாவது லோகத்தில் ஆங்காங்கு பருவமழை பெய்து நாடுகள் வளமுறும் நானாவகை பயிர்களும் விருத்தியாகும். நாடுகளில் சுபிட்சம் ஏற்படும். தேசங்களில் ஜனசமுதாயத்தின் விருத்திக்கு ஏற்ப, புதிய தொழில்நிறுவனங்கள் ஏற்படுதல், பொருட்பு அலுவலர்கள் ஊழியர்களின் நியமனம் அதிகரித்து மக்கள் எல்லாத்துறைகளிலும் ஜீவனோபாயம்பெறுதல்ஆகிய நற்பலன்கள் குரு சனி சம்யோகத்தால்

ஏற்படும். நாடுகளில் ஆளுனர்கள் தர்மநெறியில் பரிபாலனம் நடத்தி மக்களை இரட்சிப்பார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வரனருள் வடிவில் பரமாசாரியர்களாகத் திகழ்கின்ற சிவஞானகுருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் லோகத்திற்கு சிவசமய நெறிமுறைகளைத் திருவாய்மலர்ந்து போதித்து அருளிச் செய்வார்கள். சிஷ்யகோடிகளானவர்கள் ஞானதீட்சை பெற்ற தம்பிரான்கள் குருவாணையின்படி உலகெங்கிலும் சென்று சிவசமயஸ்தாபனங்கள் நிறுவி, சிவாசாரம் பரப்புகின்ற புனிதசெயல் ஆற்றுவார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் நடைபெற்றுவரும். மக்கள் அனைவரும் சிவபக்தியாக நற்கிரியை புரிந்து மேன்மையுறுவர்.

## சூரிய கிரஹணம்

குறிப்பு :- ஸ்ரீ துன்மதி ஞூ ஆடி மீ 16 உ (31—7—81) சுக்கிரவாரம் பூசநக்ஷத்திரத்தில் ஏற்படும் சூரியகிரஹணம் தென் இந்தியாவில் தென்பகுதியில் தெரியாது. புண்ணியகாலமில்லை. பம்பாய், கர்நாடக வடபாகம், ஆந்திர வடபாகம், ஒரிஸா இவற்றிலும், இவற்றிற்கு வடக்கே உள்ள இந்தியாவின் மற்ற பாகங்களிலும் தெரியும். கிரஹணம் தெரிகின்ற இடங்களில் மாத்திரம் புண்ணியகாலம். மதியம் கிரஹணம் விட்டபிறகு ஸ்நானம்செய்து பிரதமை சிரார்த்தம் செய்யலாம். யாம்யபர்வா.

## கிரஹண பலன்

துன்மதி ஆண்டில் முதல் ஆறுமாதம் மழை அதிகமின்மை, துர்ப்பிட்சம். அடுத்தஆறுமாதம் நல்லமழை. நல்ல விளைச்சல், ஆரோக்கியம். உத்தமர், பசு இவற்றுக்கு க்ஷேமம் ஏற்படும்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி ⁹ பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் தனதி சௌகரியங்கள் நல்ல நிலைமையில் இருந்து வரும். பூமியில் அபிவிருத்தி ஏற்படும். வீடுவாகனங்களில் ஜூலை 20 உ முதல் நல்லன ஏற்படும். வித்தியை கலை தொழில் அனுபவங்களில் அந்தஸ்து உயரும். விவகாரங்களில் அனுகூலம் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக

இருந்து வரும். ஜுலை மீ 17, 18, 19, 20, 21, 24, 25, 28, 29 ஆகஸ்டு மீ 4, 5, 6, 7, 8, 14, 15, 16 தேதிகளில் காரிய ஜெயமும், திட சித்தம், நல்ல ஆதாயம் தரும். ஆகஸ்டு 9, 10 தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. – ஒ. வ, வி. வூ – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் நல்ல விதத்தில் வரும். சில பிரச்சினைகளில் மனோ வேகம் வந்து தணியும். ஆகஸ்டு மீ 9 உ முதல் புத்திரர் புத்திரி களுக்கு நல்ல ஸ்திதி ஏற்படும். விடுவாகனங்கள் சீர்படும். தாம்பத்திய வாழ்வில் முன் பிணக்கும் பின் சுமுகமும் ஆகும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்தல் நலம். ஜுலைமீ 20, 21, 22, 23, 26, 27, 30, 31 ஆகஸ்டுமீ 1, 6, 7, 8, 9 10, 16 தேதிகளில் நற்பலன் தரும். ஜுலை மீ 16, ஆகஸ்டு மீ 11, 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். உடன் அவசர செல வினங்களும் ஏற்படும். சிரசில் இடிபடுதல் காயம் ஏற்படுதல் ஆகி உடன் குணமாகும். வீடு வாகனங்களின் பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்யம் நன்றாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜுலை மீ 16, 22, 23, 24, 25, 28, 29 ஆகஸ்டு மீ 2, 3, 9, 10, 11, 12, 13 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜுலை மீ 17, 18, 19 ஆகஸ்டு மீ 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டோ. )

கடகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானத்தில் தயக்க நிலையாக உள்ளவை ஆகஸ்டு மாதத்தில் வருவதாகும். பூமி இயந்திரங்களில் விருத்திக்கான செலவு மிகும். எல்லாக்காரியங்களும் நல்ல விதமாக நடந்துகொண் டிருக்கும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய

புத்திரனுக்கு நல்லன ஏற்படும். வாழ்வில் பிரீதியும் மனோ தைரியமும் ஏற்படும். ஜுலை மீ 16, 17, 18, 19, 24, 25, 26, 27, 30, 31 ஆகஸ்டு மீ 1, 4, 5, 11, 12, 13, 14, 15 தேதிகளில் நிதான செயல். சந்துஷ்டி, தனவரவு ஆகியநற்பலன்களை ஏற்படுத்தும். ஜுலை மீ 20, 21 ஆகஸ்டு மீ 16 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

5. சிம்மம், - மகம் - பூரம் - உத்திரம் ¼

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணம் வரவும் செலவும் சரிசமனாக இருந்து வரும். சகோதரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். வீடு வாகனங்களின் பிராப்தியில் நல்லன ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களுக்குச் சௌக்கியம் தரும். குல தெய்வத்துக்குப் பூசை போடுவதால் குடும்பப் பூசல்கள் தீரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் தரும். ஜுலை மீ 17, 18, 19, 20, 21, 26. 27, 28, 29 ஆகஸ்டு மீ 2, 3, 7, 8, 14, 15, 16 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களை ஏற்படுத்தும். ஜுலை மீ 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்பாபிவிருத்தியில் மூன்று விதங்களில் இலாபம் தரும். குல சம்பிரதாயங்களை முன்னிட்டு, கௌரமாகச் செலவும் செய்யும். வீடு வாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். புத்திரர்களுக்குப் பிரபல ஸ்திதியையளிக்கும். ரோகம் தீரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜுலை மீ 20, 21, 22, 23, 28, 29 ஆகஸ்டு மீ 4, 5, 9, 10, 16 தேதிகளில் நல்ல பலனைத் தரும். ஜுலை மீ 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் வெகுவாக வரும். பரிசுச் சீட்டில் பணம்வரும். பிராப்தியும் உண்டு. சகோதரர் மிச்சிரமாக

இருப்பினும் அவர்களதுநலம் நன்ருக இருந்து வரும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்துவரும். தார புத்திரர் களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஜூலை மீ 16, 22, 23, 24, 25, 30, 31 ஆகஸ்டு மீ 1, 2, 3, 6, 7, 8, 11, 12 தேதிகளில் நற்பலன்களை ஏற்படுத்தும். ஜூலை மீ 26, 27 சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

( தோ. - ந. நி. நு. நே. - ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் நல்ல வகையில் பண வருமானம் வரும். இராசிக்கு ஓர் விபத்து ஏற்பட்டுத் தப்பும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய ஆயாசம் தீரும். சாத்மீகம்தரும். எல்லாக் காரியங்களும் வெற்றியுடன் நடைபெறும். தார புத் திரர்களுக்குச் சௌக்கிய பலன் தரும். ஜூலைமீ 17, 18, 24, 25, 26, 27 ஆகஸ்டு மீ 2, 3, 4, 5, 9, 10, 14, 15 தேதிகளில் நற்பலன் தரும். ஜூலை மீ 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதி களில் மத்திமபலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே. யோ பா. பி. - பு. த. ப, ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் சீராக இருப்பினும் இல்லத்தில் சம் பிரதாய விசேஷங்கள் நிற்காமல் நடந்து வரும். வித்தியா வியா பாராதி கலைத்துறைகளில் உத்தியோகத்தில் ஜூலை 23 வ. முதல் நல்லன ஏற்படும். மனைவிக்கு உடல் நலம் பாதித்து உடன் குணமாகும். புத்திரர் பௌத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். ஜூலை 16, 20, 21, 26, 27, 28, 29 ஆகஸ்டுமீ 4, 5, 6, 7, 11, 12, 13, 16, தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஜூலைமீ 30, 31, ஆகஸ்டுமீ 1 இத்தேதிகளில் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானம் வந்துகொண்டிருக்கும். ஒப்பந்தம்லேவாதேவிகளில் ஜூலை 20 முதல் நல்லன ஏற்படும்.

சத்துருஜெயம் ஆகும். எல்லாக் காரியங்களும் வெற்றிகரமாக நடைபெறும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஜீவனோபாயத்தில் நல்லன ஏற்படும். ஜூலைமீ 17, 18, 19, 22, 23, 28, 29, 30, 31 ஆகஸ்டுமீ 1, 6, 7, 8, , 10, 14, 15 தேதிகளில் நற்பலன் தரும். ஆகஸ்டு 2, 3 தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

( கு. கே, - கோ. ஷ. ஸி. ஸூ. - ஸே. ஸோ. தா. )

கும்ப ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானம் வந்துகொண்டிருக்கும். பூமி இயந்திரங்களில் கடின முயற்சியில் ஓரளவு சிலாக்கியம் ஏற்படும். ஜூலை 23உ அளவில் வித்தியா வியாபாராதிகளில் தொழில் துறைகளில் நல்ல நிலைமையை உருவாக்கும். வியாதி குணமாகும். விவகாரங்களில் அனுகூலம் ஏற்படும். தாரபுத்திரர்களுக்குச் சௌக்கியபலன் தரும். ஜூலைமீ 16, 20, 21, 24, 25, 30,31 ஆகஸ்டு 1, 2, 3, 9, 10, 11, 12, 13, 16 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஆகஸ்டு 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

( தி. - து. ஸ. ச. த. - தே. தோ ச. சி. )

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் நிரந்தரமாக உள்ள பண வருமானம் வந்து கொண்டிருக்கும். சகோதரர் அல்லது முக்கிய உறவினர் ஒருவர் மனத்தாங்கலால் நீங்குவர். ஞாயிற்றுக் கிழமை சூரியார்ச்சனை செய்ய ஆயாசம் நீங்கும். நல்லன ஏற்படும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். ஜூலைமீ 16, 17, 18, 19, 26, 27 ஆகஸ்டு மீ 3, 4, 5, 11,12, 13, 14, 15 தேதிகளில் மத்திம பலன் தரும். ஆகஸ்டு 6, 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

# ஆடி மாதச் சிறப்பு நாட்கள்

6—7—81 வியாழன், கடகரவி 24-23. தக்ஷிணயன புண்ணியகாலம் திருவையாறு தீர்த்தம். சீகாழியில் உச்சிக்காலத்தில் புழு காப்பு. திருக்கடவூர் ஸ்ரீ காலசம்காரமூர்த்தி அபிஷேகம். ஆடிப்பண்டிகை. பௌர்ணமி.

17—7—81 வெள்ளி, வேளூர் திருக்கடவூர் முதலிய திருத்தலங்களில் ஸ்ரீ அம்பாளுக்குச் சந்தனலங்காரம் நவசக்தி அருச்சனை. இவ்விதம் ஆடிமாதம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் நடைபெறும்.

20—7—81 திங்கள், சங்கடஹரசதுர்த்தி.

23—7—81 வியாழன், தருமையாதீனம் 20ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் குருபூஜை.

24—7—81 வெள்ளி, காளாஷ்டமி.

25—7—81 சனி, வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு, நாகை முதலிய தலங்களில் ஆடிப்பூர உற்சவாரம்பம்.

26—7—81 ஞாயிறு, வேளூர்க் கிருத்திகை. தருமபுரம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம். விரதம். மூர்த்தி நாயனர், புகழ்ச் சோழ நாயனர் குருபூஜைகள்.

28—7—81 செவ்வாய், பிரதோஷம். கூற்றுவ நாயனர் குருபூஜை.

29—7—81 புதன், மாதசிவராத்திரி.

30—7—81 வியாழன், சர்வ அமாவாசை. திருவையாற்றில் இரவு ஸ்ரீ அப்பர் சுவாமிக்குத் தென்கயிலாய தரிசனம். பஞ்ச மூர்த்திகள் காட்சிகொடுத்தருளல். திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைசுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கயிலை கண்ட திருநாள். ஆதீன மடாலயத்தில் திருக்கயிலாய மலைத் திருவுருவப்பட ஆராதனை விழா. இரவு வெள்ளி ரதத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படம் திருவீதியுலா. மாயூரம் வடக்குவீதி ஸ்ரீ சியாமளாதேவி புஷ்பாஞ்சலி.

1—8—81 சனி, ஆயில்யவிழா வழிபாடு.

3—8—81 திங்கள், ஆடிப்பூரம். வேளூர், திருக்கடவூர், சீகாழி, திருவையாறு, நாகை, மதுரைமுதலியதலங்களில் ஆடிப்பூர உற்சவ தீர்த்தம்.

6—8—81 வியாழன், பெருமிழலைக்குறும்ப நாயனர் குருபூஜை.

7—8—81 வெள்ளி, வேளூர் பவித்ரோத்ஸவ ஆரம்பம். ஸ்ரீ சுந்தர மூர்த்திநாயனர் சேரமான்பெருமாள் நாயனர்குருபூஜைகள். இரவு தருமையில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனர் ஸ்ரீ சேரமான் பெருமாள் நாயனரோடு திருவீதியுலாக்காட்சி.

10—8—81 திங்கள், கலியநாயனர், கோட்புலிநாயனர் குருபூஜைகள்.

11—8—81 செவ்வாய், திருக்கடவூர் முனிசுவரபூஜை.

13—8—81 வியாழன், பிரதோஷம்.

14—8—81 வெள்ளி, வரலக்ஷ்மிவிரதம்.வேளூர்பவித்ரோத்ஸவபூர்த்தி.

15—8—81 சனி, பௌர்ணமி விரதபூஜை. மாதபூஜையில் திரட்டுப் பால். ருக் யஜுர் உபாகர்மா. சுதந்திரதினம்.

16—8—81 ஞாயிறு. காயத்ரி ஜபம். ஆடி அறுதி. சிம்மரவி 52-35.

# தமிழ் வளர்க்கும் தருமபுரம்

( பைங்காநாடு திரு. வெங்கடராமன் )

ஆசிரியர் :— புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ, வெளியீடு:— தருமை ஆதீனம், தருமபுரம், மாயூரம் 609 001. தஞ்சை மாவட்டம். விலை ரு. 5—00.

இவ்வாண்டு நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு வெளியீடாக ஞானசம்பந்தம் பதிப்பகத்தின் 779வது நூலாக வெளிவந்துள்ள அருமையான நூல் இது.

தமிழகத்துத் தொன்மையான சைவ ஆதீனங்களில் சிறப்பு மிகுந்த தருமையாதீனம், 16-ம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் ஸ்ரீ குருஞான சம்பந்தர் என்ற பேரருளாளரால் தோற்றுவிக்கப்பட்டு 450 ஆண்டுகளாகச் சைவசமய வளர்ச்சிக்கும், செந்தமிழ் வளர்ச்சிக்கும் பெரும்பணியாற்றிவருகிறது. தமிழகத்தில் சிறந்துவிளங்கும் 27 சிவாலயங்களின் பராமரிப்பைப் பெற்றுள்ளது. ஞானசம்பந்தம் என்ற மாதப்பத்திரிகை ஒன்றை 40 ஆண்டுகளாக நடத்திவருகிறது. தேவார- சிவாகம பாடசாலை, தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, பல்கலைக் கல்லூரி இவற்றின்மூலம் தமிழ்மொழிக்கும், சமய வளர்ச்சிக்கும் அடக்கமாக அயராது பாடுபட்டுவரும் இவ்வாதீனம், ஆவணிமூலவிழாவில் தமிழறிஞர்களுக்குத் தக்க பட்டமளித்து கௌரவப்படுத்துகிறது.

இப்பொழுத 26 ஆவது குருமூர்த்தியாக எழுந்தருளி அருளரசு ஒச்சும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அற்புதமான ஆசியுரையுடன் வெளிவந்துள்ளது இந் நூல்.

சைவ மடங்களின் தோற்றம், தருமை ஆதீனம், ஆதீனத் திருக்கோயில்கள், ஆதீன வெளியீடுகள், தமிழ்வளர்ச்சிப் பணிகள், பிற்சேர்க்கை என்ற ஆறு பகுதிகளாகப் பிரித்து, பாங்குடன் ஒவ்வொன்றைப் பற்றியும் விளக்கமாகவும், தெள்ளத்தெளிவுடனும் எளிய நடையில் தமிழ்மக்களும் பிறரும் உணர்ந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலுள்ள சைவத் திருமடங்கள் 18ன் விபரம், ஆதீனத்தின் பராமரிப்பில் உள்ள 27 திருக்கோயில்களின்செய்தி, தொன்மை, பெருமை இவற்றைத் தமிழ்மக்கள் அறிய வாய்ப்பளிக்கிறது.

பொதுவாக ஆடம்பரமின்றி அமைதியாக ஆக்கபூர்வமாகச் சைவ சமயத்திற்கும், செந்தமிழுக்கும் ஆதீனம் ஆற்றிவரும் தொண்டுகளை அறிந்துகொள்ள, சைவத்தின் பெருமையைப் புரிந்துகொள்ள வழிகாட்டியாக விளங்குவது. ஒவ்வொரு தமிழ்மகனும் படித்துப் பயன்பெற வேண்டிய சிறந்த நூலாகும் இது.

— நன்றி, தினமணி சுடர் 28—6—81

( நூல் வேண்டுவோர் 'மேலாளர், தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் 609 001' என்ற முகவரிக்கு அஞ்சல் செலவு உள்பட ரு. 6-20. M. O. மூலம் அனுப்பிப் பெறுவார்களாக. )

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram